## (எ) சென்மதி நிலுவைகளும், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களும்

இலங்கையின் சென்மதி நிலுவைகளையும், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களையும்பற்றிய விவரமான புள்ளிவிவரங்கள் பின்னிணைப்பிலுள்ள, 30 லிருந்து 34 வரையுள்ள அட்டவணைகளிற் தரப்பட்டுள்ளன. சென்மதி நிலுவைகளின் தரவுகள், உண்மையான வரவுகள், கொடுப்பனவுகள் பற்றிய அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்டவை. இத்தரவுகள், சுங்கப் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்ட 'வெளிநாட்டு வர்த்தகம்' என்ற பகுதியிற் பாவிக்கப்பட்ட புள்ளிவிவரங்களிலிருந்து வேறுபட்டனவாகவிருக்கும்.

### (அ) கொள்கைகள்

1968ல் இலங்கைச் சென்மதி நிலுவைகளின் போக்குகள், 1967லும், 1968லும் புகுத்தப்பட்ட இரு முக்கிய செலாவணித் திருத்தங்களாற் கணிசமான அளவு தாக்கப்பட்டன. 1967 நவெம்பர் 22ந் தேதியன்று, இலங்கை ரூபா 20 சதவீதத்தால் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. 1968 மே 6ந் தேதி, அரசாங்கம் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தைப் புகுத்தியது. இது, பலவகைப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அந்நிய செலாவணி மாற்றுவீதத்தில் மேலுமொரு உறத்தக்க வீழ்ச்சியை விளைவித்தது. அதேசமயம், இறக்குமதி, செலாவணிக் கட்டுப்பாட்டு அமைப்புமுறை ஆகியவற்றின் இறுக்கத்தைத் தளர்த்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கணிசமானளவு பண்டங்கள், கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ்[1] கொண்டுவரப்பட்டன. அத்துடன் இலாபங்களினதும், பங்கிலாபங்களினதும் பணவனுப்பல்களைப் போன்ற வகுப்புகளைச்சார்ந்த பணவனுப்பல்கள் தளர்த்தப்பட்டன. கூடிய பயனுள்ள அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவதற்கும் வேண்டிய தூண்டுதல்களை அளிக்கும் நோக்கத்துடன், நாணய, அரசிறை, உற்பத்தித் துறைகளில் ஏனைய இணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும், இலங்கையின் வெளிநாட்டு வருவாய்களினதும், கொடுப்பனவுகளினதும் சமவின்மையைச் சீர்செய்து, அதன்மூலம் சிலகாலமாகத் தொடர்ந்து இருந்து வந்த இலங்கையின் அந்நிய செலாவணி ஒதுக்குகளின் நெருக்கடி நிலையைக் குறைக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளும், அவற்றின் தன்மைகளும், இந்த அறிக்கையின் வேறு பிரிவுகளில் விவரமாக விளக்கப்பட்டுள்ளன. 1967லும், 1968லும் பொருளாதாரத் துறையில் தொடக்கப்பட்ட நடவடிக்கைகளும் கொள்கைகளும் சென்மதி நிலுவைகளில் வரவேற்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவென்பதைக் கிடைக்கப்பெற்ற சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த பத்தாண்டுகளாக, இலங்கை சென்மதி நிலுவைக் குறைகளையடைந்தது. குறித்த கால எல்லைக்குள் நாட்டின் தேவைக்கேற்ப வளர்ச்சி விகிதம் உரிய முறையில் இலக்கையடைவதற்குப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்க பொருள்வளங்களின் அளவு போதாதென்பதையே நிலுவைகளின் குறைவுகள் அடிப்படையிற் பிரதிபலிக்கின்றன. எனவே, உள்நாட்டு வளங்களுக்கு வெளிநாட்டு வளங்களை, அவை சொந்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களாயினுஞ் சரி, அல்லது குறுகிய காலக் கடன்பாடுகளாயினுஞ் சரி, பக்கத்துணையாக்குவது அவசியமாகிறது. அண்மையாண்டுகளில் முதலீட்டங்களைத் துரிதப்படுத்துவதற்காக நுகர்வுப் பொருட்களின் வகைகளையும், இறக்குமதி அளவுகளையும் கட்டுப்படுத்துமுகமாக, ஓரளவு தன்னைத் தியாகம் செய்யுந் தன்மையின் அவசியத்தை ஏற்படுத்தியிருக்கையில், அதே வேளையில் அதிகரித்த அந்நிய செலாவணித் தொகைகள் இன்றியமையாத மூல, மூலதனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. ஆயினும், இலங்கையின் வேகமான குடிசன அதிகரிப்போடு நாணய விரிவினாலும், வருமானம் மீளப் பகிரப்படும் கொள்கைகளாலும் ஏற்பட்ட உள்நாட்டுப் பண வருவாய்கள் அதிகரித்தும் உள்ள நிலையில், நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதிகளைப்

---

1. தனியாள் இறக்குமதி உத்தரவுச் சீட்டின்றி தடையில்லாது அனுமதிக்கப்படும் இறக்குமதிகளே கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளாகும்.

பெருமளவிற்குக் குறைக்கும் வாய்ப்பு ஓரளவிற்கு குன்றியிருந்தது. இதனுல் இறக்குமதிக்கான கேள்விவாயிலாகத் தோன்றி, நாட்டின் அந்நிய செலாவணி ஒதுக்குகளில் ஏற்பட்ட அமுக்கத்தைக் கடுமையான அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகளினுலும், பங்கீட்டு முறையினுலுமே கட்டுப்படுத்தப்படவேண்டியிருந்தது.

சில காலங்களாக நடைமுறையிலிருந்து வந்த கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், செலாவணிக் கட்டுப்பாடுகளும் பொருளாதாரத்தின்மீது அபாரமான விளைவை உண்டுபண்ணியுள்ளனவென்பது 1967ல் தெளிவாகத் தோன்றியது. சிக்கலான இறக்குமதிச் செலாவணிக் கட்டுப்பாட்டினைப் பாதுகாப்பதனுலெழும் கடினமான நிர்வாகப் பிரச்சினையையும், முறையற்ற செலாவணி நடவடிக்கைகளின் அதிகரிப்பினது தாக்கத்தையும்விட, அந்நியச் செலாவணி ஒதுக்கீடு செய்வதில் அனுமதிப் பங்குமுறையைக் கடுமையாகக் கைப்பிடித்தல் திறனற்ற, சமமற்ற முறையென உடனடியாகத் தோன்றியது. உதாரணமாக, தங்களினது முதலீட்டத்துக்கும் உற்பத்திக்கும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளிடுகைகளிற் தங்கியிருந்த ஆற்றல் வாய்ந்த கைத்தொழிற்றுறைகளுக்கு, மிகப் பலனளிக்கத்தக்க முறையிற் பாவிப்பதற்குப் போதிய செலாவணிகள் ஒதுக்கீடுசெய்யப்படவில்லை. இதற்கிடையில், இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளுக்கான பாதகமான உலக விலைகளின் விளைவால் தொடர்ச்சியாக வீழ்ச்சியுற்றுவந்த இலங்கையின் அந்நிய செலாவணி வருவாய்களோடு இறக்குமதிக்கான கேள்விகள் விரிவுற்ற நிலையில் அந்நிய செலாவணிக்கான இலங்கை ரூபாய் விலைகள் உச்சமாகவிருந்தன. எனினும், பற்றுக்குறையினுலேற்பட்ட இவ்வுயர்ந்த விலை கடுமையான அந்நிய செலாவணிப் பங்கீட்டு முறைகளினுற் செயற்கையாகக் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையில், அவை உத்தியோகபூர்வமான செலாவணி மாற்று வீதத்திற் பிரதிபலிக்கப்படவில்லை.

1967 நவெம்பரிற் கையாண்ட இலங்கை ரூபாய் நாணய மதிப்பிறக்கமும், 1968 மேயில் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணிச் சான்றிதழ்த் திட்டமும் இலங்கையின் பொருளாதாரத்தை அந்நிய செலாவணியின் உண்மையான தட்டுப்பாட்டு விலைக்கு ஏற்ப ஓரளவுக்கு மாற்றியமைத்தன. எனினும், இலங்கையின் வருமானங்களிற் பெருமளவுக்குச் சமமின்மையிருப்பதாலும் சில பிரதான நுகர்ச்சி, உற்பத்தித் துறைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றபடியாலும், சில அத்தியாவசிய இறக்குமதிகளும், சில வகையான கட்புலனுகா விடயங்களும், மூலதனக் கொடுப்பனவுகளும் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டன.

நாட்டின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் கடுமையான கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்கும்போதும், கொடுப்பனவுகளிற் கணிசமான பகுதி, 1968ல் தொடக்கப்பட்ட செலாவணிச் சீர்திருத்தங்களின் விளைவுகளிலிருந்து பின்னப்பட்டிருக்கும்போதும், செலாவணிச் சீர்திருத்த விளைவுகளின் முக்கியத்துவத்தைப்பற்றி ஒரு திருப்திகரமான எடை போட முடியாது. எனினும், 1968ல் இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றக் குறிகாட்டிகளும், நாட்டின் சென்மதி நிலுவைமீதான அளவைகளின் விளைவுகளும், செலாவணிச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து அந்நிய செலாவணிச் சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்து அந்நிய செலாவணியின் பாவிப்புக்கள் பகுத்தறிவுடையனவாகப் பாவிக்கப்பட்டுள்ளனவென்பதைக் காட்டுகின்றன.

ஒரு நாட்டின் நாணயத்தை மதிப்பிறக்கம் செய்வதனுல் அதன் அந்நிய செலாவணிமீது எவ்வளவு பெறுபேறுகள் ஏற்பட்டுள்ளனவென்பதைக் கொடுப்பனவுக் குறைகளிலேற்படும் முன்னேற்றத்தினுலேயே அளவிடலாம். இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளினதும் வரவுகளினதும் பெரும்பகுதி இறக்குமதியேற்றுமதிக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்கின்றதென்ற குறைபாடு இருப்பினும், மேலே குறிக்கப்பட்ட குறிக்கோள் 1968ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொதுநலச் சேவைகளைப் பாதிக்காவண்ணம் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய மேலதிக வளங்களைச் சென்மதி நிலுவைகளிற் குறைவையேற்படுத்துவதன்மூலம் வழங்குவது சில காலங்களாக நடை

முறையிலிருந்து வருவதால், இந்நிலேயில், மேற்கூறிய குறிக்கோள் நிறைவேற்றம் மெச்சக்கூடிய காரியமாகும். அட்டவணை II (எ) (1)ம், II (எ) (2)ம் இலங்கையின் சென்மதி நிலுவைகளை முறையே ரூபாப் பெறுமதியிலும், ஐ.அ. டொலர் பெறுமதியிலும் தருகின்றன. 1967 நவெம்பரில் செய்யப்பட்ட நாணய மதிப்பிறக்கத்தின் விளைவால் 1968ல் சென்மதி நிலுவைகளின் ரூபாப் பெறுமதி வீக்கமடைந்திருப்பதால், நாட்டின் வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள்மீது நாணய மதிப்பிறக்கத்தின் விளைவை அறிவதற்கு அந்நிய செலாவணியை ஐ.அ. டொலர்களின் பெறுமதிக்குச் சமப்படுத்துவதே சிறந்த முறையெனக் கையாளப்பட்டுள்ளது. இவ்வடிப்படையின்படி, இலங்கையின் மொத்த வர்த்தகக் குறை (உதவி நிதியீட்டப்பட்ட இறக்குமதிகள் உட்பட) 1967ல் இருந்து 700 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 610 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்குக் குறைக்கப்பட்டது. 1968ல் வழங்கப்பட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்களின் பெறுமதி 1967ல் வழங்கப்பட்டதைவிட 8,360 இலட்சம் ரூபாய்களால் அதிகமாகவிருந்ததால், மேற்கூறிய காரணிகள் மிகவும் முக்கியமாகத் தோன்றுகின்றன. இதைவிடச் சிறந்த முறையானது, உதவி நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளை இதனிலிருந்து விலக்குவதாகும். இந்நிலேயில், வர்த்தகக் குறையானது 1967ல் இருந்த 180 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 50 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்குக் குறைக்கப்பட்டது. இது, 72 சதவீதம் கொண்ட முன்னேற்றமாகும். வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான மொத்த நடைமுறைக் கணக்குக்குறை (அதாவது கட்புலனுகாக் கொடுக்கல்வாங்கல்கள் உட்பட) 1967ல் இருந்த 180 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 90 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு வீழ்ச்சியுற்றது.

மற்றுமொரு கவனத்துக்குரிய விடயம் யாதெனில், வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தும், சேவைகளின் விற்பனையிலிருந்தும் பெற்ற வருவாய்கள் 1967ல் இருந்த 3,910 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 3,680 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு வீழ்ச்சியுற்றன. வணிகப்பொருள் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த அந்நிய செலாவணி வருமானம் 1967ன் 3,470 இலட்சம் டொலர்களிலிருந்து 1968ல் 3,320 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்குக் குறைவுற்றிருக்க, சேவைகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த வருமானம் 1967ன் 450 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 90 இலட்சம் ஐ.அ. டொலர்களால் வீழ்ச்சியுற்றது. 1968ல் அந்நிய செலாவணி நியதியிலான வணிகப்பொருள் ஏற்றுமதிப் பெறுமதியின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் முந்திய ஆண்டினதுடன் ஒப்பிடும்போது, தேயிலேயினதும், இரப்பரினதும் சராசரிக் கூறுவிலே வீழ்ச்சியும், அத்துடன் தேயிலே ஏற்றுமதிகளின் அளவிலேற்பட்ட 3.6 சதவீத வீழ்ச்சியுமாகும். சேவை விற்பனையிலிருந்து பெற்ற அந்நிய செலாவணி வருமானத்தின் வீழ்ச்சித் துறையிலிருந்தும், துறைமுகத்திலிருந்தும் பெற்ற வருவாய்கள் வீழ்ச்சியுற்றதனுலாகும். இது ஓரளவில் இலங்கை ரூபா நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதற்கமைய இக்கட்டணங்கள் மாற்றியமைக்கப்படாததனுலாகும். சேவைகளின் கணக்கிலுள்ள ஏனைய விடயங்களிலிருந்தும் பெற்ற வருவாய்கள் அந்நிய செலாவணி நியதியின்படி திருத்தமடைந்தன. 1968ல் ஏற்றுமதிகளின் போக்கினைப் பாதித்த காரணிகளின் விவரக் கூறுகள் இப்பகுதியின் பின்பாகத்திற் தரப்பட்டுள்ளன. ஏற்றுமதியமைப்பில் முதனிலே உற்பத்திப் பொருட்கள் முக்கிய பங்குடையனவாக விளங்குகின்ற நிரம்பல்கள் அதிக காலமெடுப்பதால், செலாவணி வீதத்திலேற்படும் மாற்றத்தின் விளைவுகள், ஏற்றுமதித் துறையைவிட, செலவுகள்மீது நேரடியான தாக்கத்தை விளைவிப்பதனூடாக இறக்குமதித் துறையையே விரைவாகப் பாதிக்கின்றன.

மேலதிக மதிப்புள்ள நாணயத்தின் செலாவணி வீதத்தை மாற்றுவதற்கான மற்றுமொரு பிரதான ஆதாரம் யாதெனில், செலாவணி மாற்றத்தினுல் எழும் உயர்ந்த இறக்குமதி விலேகள் இறக்குமதிப் பதிலீட்டுத் தொழிற்பாடுகள்மீது பலாபலன்களை உண்டுபண்ணுவதுடன், உள்நாட்டுப் பணநியதியில் ஏற்றுமதிகளின் பெறுமதி கவர்ச்சியாகவிருப்பதால், மேலதிக உற்பத்தியாற்றல் இருக்குமிடத்து ஏற்றுமதியை ஊக்குவிக்க உதவியளிக்கும்

என்பதுமேயாகும். அந்நிய செலாவணிக்கான உயர்ந்த விலையும், அதனைத் தொடர்ந்து நடைமுறையிற் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமானது, விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் வேண்டிய மூலப் பொருட்கள், நடுத்தர, மூலதனப் பொருட்களின் இறக்குமதிகள்மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதாலும், 1968ல் இலங்கைப் பொருளாதாரமானது மேற்கூறிய சந்தர்ப்பங்களுக்கு வழிவகை செய்தது. இவ்வறிக்கையின் வேறிடத்திற் குறிப்பிடப்பட்டுள்ள நிதி, நாணய, உற்பத்திக் கொள்கைகள் இச்செலாவணி ஏற்பாடுகளுக்கு உதவி வழங்கின.

## 2. போக்குகள்[1]

1968க்கான ஏற்றுமதி வருவாய்களின் தற்காலிக எண்தொகை 19,750 இலட்சம் ரூபாய்களாக இருக்கும்போது, 1967இனைவிட 3,250 இலட்சம் ரூபாய்கள் கொண்டவதிகரிப்பைக் காட்டுகின்றது. இது, 591 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மீள ஏற்றுமதிகளை நீக்கியதாகும். ஏற்றுமதிப் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பு, ஓரளவுக்கு தேயிலையினதும், தெங்குப் பொருட்களினதும் சராசரி ரூபாய் விலைகளிலேற்பட்ட அதிகரிப்பினாலும், இரப்பரினதும் தெங்குப் பொருட்களினதும் அளவிலேற்பட்ட அதிகரிப்பினாலுமாகும். இறக்குமதிப் பெறுமதிகளின் மதிப்பிடப்பட்ட தொகை 23,410 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967ன் இறக்குமதி மட்டத்தைவிட 3,560 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தது. ரூபாய் நியதியில் மேற்குறிப்பிட்ட ஏற்றுமதி வருவாய்களினதும், இறக்குமதிக் கொடுப்பனவுகளினதும் எண்தொகைகளே இலங்கைச் சென்மதி நிலுவைகளிற் பதிவுசெய்யப்பட்ட மிகக் கூடிய தொகைகளாகும். 1968ல் ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமதிகளின் அதிகரித்த மட்டம், 1967 நவெம்பரில் இலங்கை ரூபாயை 20 சதவீதத்தால் மதிப்பிறக்கம் செய்ததன் பிரதான விளைவாகும். சகல பிரதான இறக்குமதி விடயங்களின் கொ.கா.க. விலைகள் அதிகரித்ததனாலும், ''உதவிக் குழுவின்'' ஏற்பாடுகளுக்குக்கீழ் வந்தடைந்த அதிகரித்த இறக்குமதிகளினாலும் 1967ல் இறக்குமதிகளின் பெறுமதி பெருமளவில் அதிகரித்தது. 1968ல் அதிகரித்த இறக்குமதிகளிலொருபகுதி, 1968 மேயில் நடைமுறைக்குக் கொண்டுவந்த அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின் விளைவாற் சில இறக்குமதிகளைக் கட்டில்லாப் பொது அனுமதி சீட்டு[2] முறையின்கீழ் கொண்டுவந்ததன்மூலம் நேரடிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதாலேற்பட்டிருக்கக்கூடும். 1968ல் வணிகப்பொருட் கணக்கின் குறை தற்காலிகமான தொகையாகிய 3,660 இலட்சம் ரூபாய்களாகவிருந்தபோது, இது, 1967ன் 3,350 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைவிட 9.2 சதவீதம் அதிகமாகவிருந்தது. இவ்வெண்தொகைகளை விளக்குமிடத்து, இலங்கை ரூபாவை மதிப்பிறக்கம் செய்ததனால் 1968ல் நிலவிய செலாவணி வீதத்துக்கும், 1967ன் முதற் பதினொரு மாதங்களில் நிலவிய செலாவணி மாற்று வீதத்துக்குமிடையிலுள்ள வேறுபாட்டுக்குத் தகுந்த இடமளிக்கப்படல் வேண்டும். உதாரணமாக, ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமதிகளை ஐ.அ. டொலர்களுக்கு மாற்றியபோது, ஏற்றுமதிகளின் பெறுமதி 3,320 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு 150 இலட்சம் ஐ.அ. டொலர்களால் வீழ்ச்சியுற்றிருக்க, இறக்குமதிகளின் பெறுமதி இதற்கு மேலாக 1967ல் இருந்து 3,930 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 4,170 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு 240 இலட்சம் ஐ.அ. டொலர்களால் வீழ்ச்சியுற்றது. எனவே, டொலர் பெறுமதியிலான வணிகப்பொருள் வர்த்தகக் குறை 1967ல் இருந்த 700 இலட்சம் ஐ.அ. டொலர்களிலிருந்து 1968ல் 610 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு முன்னேற்றமடைந்தது.

---

1. இப்பகுப்பாய்வு, ஆண்டின் உண்மையான வருவாய்களையும், கொடுப்பனவுகளையும் கொண்டுள்ள செலாவணிப் பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தரவின் அடிப்படையில் அமைந்துள்ளது.

2. தனியாள் இறக்குமதி உத்தரவுச் சீட்டின்றி தடையில்லாது அனுமதிக்கப்படும் இறக்குமதிகளே கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளாகும்.

1968ல் மாற்றற் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய கட்புலஞகாக் கணக்குகள்மீதான இலங்கையின் நிலுவை, 1967ன் 460 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மிகைக் கெதிராக 200 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மிகையைக் காட்டிற்று. கட்புலஞகாக் கணக்கிலேற்பட்ட சீர்கேடு, வருமானங்களினது வீழ்ச்சியினதும், கொடுப்பனவுகளினதும், அதிகரிப்பினதும் ஒருமித்த விளைவாகும். மொத்தக் கட்புலஞகா (சேவை) வருமானங்கள் 1967ன் 2,620 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 2,540 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றிருக்க, அதே காலப்பகுதியில் மொத்தக் கட்புலஞகாக் கொடுப்பனவுகள் 2,160 இலட்சம் ரூபாய்களிலிருந்து 2,340 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. மிகையிலேற்பட்ட வீழ்ச்சி, துறையிலிருந்தும், துறைமுகத்திலிருந்தும் பெற்ற வருவாய்களின் கணிசமான வீழ்ச்சியிஞலும், குறைந்தளவில் தற்காலிகத் தடை தளர்த்தப்பட்டதஞலேற்பட்ட முதலீட்ட வருமானக் கொடுப்பனவுகளின் அதிகரிப்புக்களிஞலும், அரசாங்கச் செலவுகளிலேற்பட்ட அதிகரிப்புக்களிஞலுமாகும். வணிகப்பொருள் நிலுவைக் குறையினை 1968ன் கட்புலஞகாக் கணக்கின்மீதான சிறிய மிகைக் கெதிராகச் சீராக்கம் செய்யப்பட்டபோது, இலங்கைச் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு 1967ன் 2,890 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையுடன் ஒப்பிடும்போது, 1968ல் 3,460 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைக் காட்டிற்று. நடைமுறைக் கணக்கு நிலுவையை தேறிய நீண்டதவணை மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கெதிராக எதிரீடுசெய்வதாற் பெறப்படும் அடிப்படை நிலுவை, 1967ல் இருந்த 1,280 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 1,220 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. டொலர்ப் பெறுமதிகளில் அடிப்படை நிலுவைக் குறை 260 இலட்சம் ஐ. அ. டொலர்களிலிருந்து 1968ல் 200 இலட்சம் ஐ. அ. டொலர்களுக்கு வீழ்ச்சியுற்றது. இக்குறை 1968ல் நிதியீட்டப்பட வேண்டிய தொகையாகவிருந்தது.

1968 திசெம்பர் இறுதியில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் (ஸ்ரேலிங் கடன் ஆழ்நிதிகளை நீக்கி) 4,170 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இத்தொகை முந்திய நிதியாண்டின் இறுதியிலிருந்த தொகையைவிட 100 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தது. சென்மதி நிலுவையிலுள்ள அடிப்படைக் குறையாகிய 1,220 இலட்சம் ரூபாய்கள் (200 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) பல்வேறு குறுகிய தவணைக் கடன்பாட்டு ஒழுங்குகளிஞல் நிதியீட்டப்பட்டன. சர்வதேச நாணய நிதியிலிருந்து 1,680 இலட்சம் ரூபாய்களும் (277 இலட்சம் ஐ.அ. டொலர்கள்), அந்நிய வங்கி மூலங்களிலிருந்து 290 இலட்சம் ரூபாய்களும் (49 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கடன்களாகப் பெறப்பட்டன.

## இ. வெளிநாட்டு வளங்களும் அவைகளின் பாவிப்பும்

1968ல் இலங்கைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த வெளிநாட்டு வளங்கள் 28,110 இலட்சம் ரூபாய்களாக (4,720 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) இருந்தன. ஒப்பீடுசெய்யும்பொழுது, 1967ல் இத்தொகை 24,020 இலட்சம் ரூபாய்களாக (5,040 இலட்சம் ஐ.அ. டொலர்கள் இருந்தது. அந்நிய செலாவணி நியதிப்படி இலங்கைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த வளங்கள் உண்மையில் 320 இலட்சம் ஐ.அ. டொலர்களால் வீழ்ச்சியுற்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதஞல் 1968ல் இலங்கையின் இறக்குமதி வலு பெருமளவில் வீழ்ச்சியுற்றது. 1967ன் 18,660 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடும்போது (3,910 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) 1968ல் சம்பாதிக்கப்பட்ட அந்நிய செலாவணி 21,870 இலட்சம் ரூபாய்களாகவே (3,670 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) விளங்கிற்று. ரூபாய்ப் பெறுமதியிலான உள்நாட்டு ஏற்றுமதிகளிலிருந்துபெற்ற ஏற்றுமதி வருமானங்கள் 3,250 இலட்சம் ரூபாய்களால் 19,750 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தபோதும், ஐ.அ. டொலர்களுக்குச் சமப்படுத்தப்பட்டபோது, 150 இலட்சம் ஐ.அ. டொலர்களால் வீழ்ச்சியுற்றன. அலுவலக மாற்றங்களைத் தவிர்ந்த சேவைகளிலிருந்து பெற்ற வருவாய்கள் 1967ல் இருந்த 2,160 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 2,120 இலட்சம் ரூபாய்களுக்கு

எல்லையளவால் வீழ்ச்சியுற்றன. 1968ல் இலங்கை பாவித்த வெளிநாட்டு வளங்களின் தொகை 28,110 இலட்சம் ரூபாய்களாக (4,720 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) அமைந்து, நடைமுறை வருவாயிலும்பார்க்க (1,050 இலட்சம் ஐ.அ. டொலர்களால்) அதிகமாகவிருந்தது. அந்நிய உதவியின் அதிகரித்த உட்பாய்வினுலும், குறுகிய தவணைப் பொறுப்புக்களின் அதிகரிப்பினுலுமே இவ்வளவு தொகையான வெளிநாட்டு ஒதுக்குகளைச் சேகரிக்க முடிந்தது. அலுவலக, தனியார் நீண்ட தவணை மூலதன உட்பாய்வுகள் 1967ன் 2,610 இலட்சம் ரூபாய்களிலிருந்து (550 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு) 1968ல் 3,400 இலட்சம் ரூபாய்களுக்கு (570 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) அதிகரித்து, மொத்த வெளிநாட்டு வளங்களில் 1967ன் 11 சதவீதத்துக்கெதிராக 1968ல் 12 சதவீதத்துக்கு வகைகூறின.

அண்மை ஆண்டுகளில் அலுவலக மூலதன உட்பாய்வுகளினது அமைப்பின்படி மொத்த உதவி உட்பாய்வுகளிற் கடன்களின் பங்கு அதிகரிப்பதும், நன்கொடைகளின் பங்கு வீழ்ச்சியுறுவதும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமென்று 1967ம் ஆண்டறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருந்தது; அதோடு எதிர்காலத்தில் இலங்கையின் கடனைச் சேவைசெய்வதனுல் எழும் செலவு விளைவுகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அலுவலக மூலதன உட்பாய்வுகளின் சாதகமற்ற நிலை 1968ல் தொடர்ந்து நீடித்திருந்தது. மொத்த அலுவலக மூலதன உட்பாய்வுத் தொகையாகிய 3,370 இலட்சம் ரூபாய்களில் (570 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கடன்களின் தொகை 2,950 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று (500 இலட்சம் ஐ.அ. டொலர்கள்). இது, 1968ல் வந்தடைந்த மொத்த மூலதன உட்பாய்வுகளில் 87 சதவீதமாக விளங்கிற்று. ஒப்புநோக்கும்போது, 1967ல் இம்மூலத்திலிருந்துபெற்ற தொகை 81 சதவீதமாகும். நன்கொடைகளின் மொத்தப் பெறுமதி 1965ன் 640 இலட்சம் ரூபாய்களிலிருந்து (134 இலட்சம் ஐ.அ. டொலர்கள்), 1968ல் படிப்படியாக 420 இலட்சம் ரூபாய்களுக்கு (71 இலட்சம் ஐ.அ. டொலர்களுக்கு) வீழ்ச்சியுற்றது. இதே காலப்பகுதியில் மொத்த அலுவலக மூலதன உட்பாய்வுகளில் நன்கொடைகளின் பங்கு 45 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்துக்குக் குறைவுற்றது. 1968ல் பெறப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் பண்டவுதவிப் பெறுமதி 2,730 இலட்சம் ரூபாய்களாகவிருக்க (458 இலட்சம் ஐ.அ. டொலர்கள்), திட்டவுதவியின் பெறுமதி 400 இலட்சம் ரூபாய்களாக (67 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) விளங்கிற்று.

நீண்ட தவணை மூலதன உட்பாய்வுகளிலிருந்து 1968ம் ஆண்டுக்காலப் பகுதியில் கிடைக்கப்பெற்ற வளங்கள் 1968ல் ஏற்பட்ட கொடுப்பனவுக் குறையின் அளவை நிதியீட்டுவதற்குப் போதாமலிருந்தது. இதன் விளைவால் இவ்வளங்களுக்குத் துணையாக இலங்கையின் குறுகிய தவணைப் பொறுப்புக்களை அதிகரிக்கவேண்டியிருந்தது. இக்குறுகிய தவணைப் பொறுப்புக்களை வழங்கிய பிரதான மூலம் சர்வதேச நாணய நிதியாகும். 1968ல் சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுப்பனவு செய்த மொத்தத் தொகை 2,130 இலட்சம் ரூபாய்கள் (360 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) ஆகும். சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள், ஏற்றுமதி வருவாய்களிலேற்படும் ஏற்றவிறக்கங்களுக்கு நிவாரணம் செய்வதற்கான திட்டத்தின் பேரில் பெற்ற 1,149 இலட்சம் ரூபாய்களைக் கொண்டிருக்க (193 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) ச.நா.நி. இல் கிடைக்கும் வழமையான எடுப்பனவு வசதிகள், இவ்வாண்டில் இலங்கை மேலதிக 980 இலட்சம் ரூபாய்கள் (165 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கொண்ட தொகையை எடுப்பனவு செய்வதற்கு வழிவகுத்தன. எனினும், ச.நா.நிதியிலிருந்து பெற்ற 2,130 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்த எடுப்பனவில் (357 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) இலங்கை இவ்வாண்டில் 480 இலட்சம் ரூபாய்கள் (81 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கொண்ட தொகையை மீளக் கொள்வனவு செய்யவேண்டியிருந்ததால், குறையை நிதியீட்டம் செய்வதற்குக் கிடைத்த தொகை 1,650 இலட்சம் ரூபாய்களாகவே (277 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) இருந்தது. அண்மையாண்டுகளில் சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள், கணிசமானளவு குறுகிய—தவணை வெளிநாட்டு வளங்களை வழங்குவதற்குத் தொடர்ந்தும் உதவிபுரிந்தன.

ச.நா. நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகளைவிட, வெளிநாட்டு வளங்களாவன இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நாடுகளுடனன கடன்பாடுகளினாலும், அந்நிய வங்கி மூலங்களிலிருந்துபெற்ற குறுகிய தவணைக்கடன்பாடுகளினாலும் மேலும் அதிகரிக்கப்பட்டன. 1968ல் இம்மூலங்களினால் வழங்கப்பட்ட தொகைகள் முறையே 420 இலட்சம் ரூபாய்களும் (71 இலட்சம் ஐ.அ. டொலர்கள்), 290 இலட்சம் ரூபாய்களுமாகும் (49 இலட்சம் ஐ.அ. டொலர்கள்).

மொத்தத்தில் பல்வேறு கொடுப்பனவுப் பொறுப்புக்களைச் சமாளிப்பதற்காக 1968ல் இலங்கைக்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டு வளங்களில் 78 சதவீதம் நடைமுறையாண்டில் சம்பாதிக்கப்பட்ட அந்நிய செலவாணியாலும், 12 சதவீதம் பல்வேறு மூலதன உட்பாய்வுகளினாலும், 10 சதவீதம் குறுகிய-தவணைப் பொறுப்புக்களினாலும் வழங்கப்பட்டன.

முன்பு கூறியபடி, 1968ல் இலங்கைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த வெளிநாட்டு வளங்கள் 28,110 இலட்சம் ரூபாய்கள் (4,720 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) ஆகும். இத்தொகையில், 23,410 இலட்சம் ரூபாய்கள் (அல்லது 84 சதவீதம்) பண்டப்பொருள் இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பாவிக்கப்பட்டது; 1968ல் இவ்விறக்குமதிகளில் 12 சதவீதம் உதவிகளிலிருந்து நிதியீட்டப்பட்டிருந்ததற்கெதிராக 1967ல் 11 சதவீதமே இதனிலிருந்து நிதியீட்டப்பட்டது. 1967ம் ஆண்டில் இறக்குமதித் திட்டம் குறிப்பாக மூதலீட்டப் பொருட்கள், மூலப் பொருட்களின் இறக்குமதிக்கே முதலிடம் வழங்கியதென 1967 ஆண்டறிக்கையில் கூறப்பட்டிருந்தது. 1968ல் இந்நிலை மேலும் முன்னேற்றமடைந்தது. முதலீட்டப்பொருள் இறக்குமதிகளின் மொத்தம் 1967லிருந்த 5,320 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 6,440 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்திருக்க, நடுத்தரப் பொருட்களின் பெறுமதி 3,190 இலட்சம் ரூபாய்களிலிருந்து 3,680 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. வளமாக்கிகள், இழுபொறிகள் போன்ற விவசாய உள்ளிடுகைகளின் இறக்குமதியிலும், பொறிகள் மூலப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், போக்குவரத்துச் சாதனம் ஆகிய கைத்தொழில் உள்ளிடுகைகளின் இறக்குமதியிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காணப்பட்டன. இறக்குமதி அமைப்பிலேற்பட்ட இம்மாற்றத்தின் விளைவு யாதெனில், 1968ல் உற்பத்திவலு கூடியளவுக்குப் பாவிக்கப்பட்டமையாகும். சேவைகளின் பேரிலான கொடுப்பனவுக்காகப் பாவிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டு வளங்கள் 2,340 இலட்சம் ரூபாய்களாக (393 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) அமைந்திருக்க, அந்நியக் கடன்களின் கடன்குறைப்பும், மூலதன மீளவனுப்பல்களும், 990 இலட்சம் ரூபாய்களை (166 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) உட்கொண்டது. சேவைக் கொடுப்பனவுகளுக்காகப் பாவிக்கப்பட்ட வெளிநாட்டு வளங்களில் 340 இலட்சம் ரூபாய்கள் (57 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) முதலீட்ட வருமானத்தை மீளவனுப்பல் செய்வதற்குப் பாவிக்கப்பட்டிருக்க, 400 இலட்சம் ரூபாய்கள் (67 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) வட்டிக் கொடுப்பனவுகளுக்கும், 270 இலட்சம் ரூபாய்கள் (45 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) குடியகல்வோரின் மாற்றல்களுக்காகவும், பாவிக்கப்பட்டுள்ளன. 1968ல் டொலர் நியதியின் ஒவ்வொரு துறைகளிலுமுள்ள மாற்றல்களின் அளவு, வீழ்ச்சியுற்றது. மூலதன மீளவனுப்பல்களுக்கும், கடன்களின் கடன் குறைப்புக்கும் பாவிக்கப்பட்ட வளங்களில் தனியார் மூலதன மீளவனுப்பல் 100 இலட்சம் ரூபாய்கள் (17 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) ஆகும்; இத்தொகையில் 90 இலட்சம் ரூபாய்கள் (15 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) எண்ணெய்க் கூட்டுநிலையங்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈடாகும். சர்வதேச நாணய நிதியிற் பெற்ற மீளக் கொள்வனவுகள் 480 இலட்சம் ரூபாய்களாகவிருக்க (81 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) அந்நிய அரசாங்கங்களுக்கான அலுவலகக் கடன்களின் மீளக் கொடுப்பனவு 590 இலட்சம் ரூபாய்களை (99 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) உட்கொண்டது. மீதியான வளங்களில் 570 இலட்சம் ரூபாய்கள் (96 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கொண்ட தொகை அந்நிய வங்கி மூலங்களுக்கான கடன்களை மீளக் கொடுப்பனவு செய்வதற்குப் பாவிக்கப்பட்டிருக்க, 140 இலட்சம் ரூபாய்கள் (24 இலட்சம் ஐ.அ. டொலர்கள்) கொண்ட தொகை குறுகிய தவணைப் பொறுப்புக்களைக் குறைப்பதற்குப் பாவிக்கப்பட்டது.

## ஈ. 1968ம் ஆண்டின் விவரமான போக்குகள்

### (அ) வணிகப்பொருட் கணக்கு

வணிகப்பொருட் கணக்கின் விவரமான போக்குகள் இவ்வாண்டறிக்கையின் வெளிநாட்டு வர்த்தகப் பிரிவில் ஆராயப்பட்டுள்ளன.

### (ஆ) கட்புலனுகாக் கணக்கு

அண்மையாண்டுகளில் இலங்கைச் சென்மதி நிலுவைகளினது கட்புலனுகாக் கணக்கின் செயலாற்றல் முழுவனே திருப்திகரமானதல்ல. 1965ம் ஆண்டில் கட்புலனுகாக் கணக்குகளினுல் இலங்கைக்கு 720 இலட்சம் ரூபா கொண்ட மிகை ஏற்பட்டது. காலப்போக்கில் இம்மிகை, படிப்படியாக வீழ்ச்சியுற்று, 1968ல் இது தற்காலிக மதிப்பீடுகளின்படி 200 இலட்சம் ரூபாய்களாக மட்டுமே விளங்கிற்று. 1968ல் கட்புலனுகாக் கணக்கின் மொத்த வருவாய்கள் 80 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றிருக்கையில், மொத்தக் கொடுப்பனவுகள் 1967னதுடன் ஒப்பிடுகையில், 180 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதன் விளைவாக, 1968ல் கட்புலனுகாக் கணக்குகள் முந்திய ஆண்டினதுடன் ஒப்பிடுகையில், 260 இலட்சம் ரூபாய்களால் சீர்கேடடைந்தன.

1968ல் கட்புலனுகாக் கணக்கின்மீதான கொடுப்பனவுகளின் தொகை அதிகரிப்பிற்குப் பல காரணிகள் இருந்தன. முதலீட்ட வருமானத்தினுலாய வெளியோட்டம் 1967ல் 650 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 740 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. முதலீட்ட வருமான அனுப்பல்களின் மீதான தற்காலிகத் தடை தளர்த்தப்பட்டமையால், 1966ல் 260 இலட்சம் ரூபாய்களையும், 1967ல் 340 இலட்சம் ரூபாய்களையும் கொண்ட வெளியோட்டம் ஏற்பட்டது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறை வருமானங்கள் பற்றிய தற்காலிகத் தடை முற்ருக நீக்கப்பட்டமையால், 1968ல் இவ்வெளியோட்டம் மேலும் அதிகரித்தது. ஆயினும், இக்கணக்கின் மீதான வெளியோட்டம், டொலர் நியதிகளின்படி 1967ல் 70 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 1968ல் 60 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறைவுற்றது. தற்போது பங்கிலாபங்களினதும் இலாபங்களினதும் பணவனுப்பல்களுக்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கவேண்டியிருக்கின்றது. இலங்கைச் சென்மதி நிலுவைகளின் கட்புலனுகாக் கணக்கிலிருந்து தோன்றிய இன்னெரு பிரதான விடயம் யாதெனில், அந்நிய கடனைத் தீர்ப்பதற்கு வேண்டிய வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரித்த திரட்சியாகும். இக்கணக்கின்மீதான மொத்தக் கொடுப்பனவுகள் 1967ல் 330 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 40) இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பு, தற்போதைய ஆண்டுகளில் அந்நிய பொருளாதார உதவியை அதிகமாகப் பயன்படுத்தியமையின் இயல்பான விளைவாகும். ஆயினும், மொத்த அந்நிய செலாவணி வருவாய்களின் பங்குவீதமாகப் பார்க்கின் இத்தொகை ஒப்பியல்பில் இன்னும் சிறிதாகவேயிருக்கின்றது.

1968ல் அரசாங்கச் செலவுகளின்மீதான இலங்கையின் செலவீட்டில் சிறு அதிகரிப்புக்கள் காணப்பட்டிருக்கையில், குடியகல்வோர் மாற்றல்களுக்கான கொடுப்பனவுகள் சிறிதாக வீழ்ச்சியுற்றன. கட்புலனுகாக் கணக்கின் வரவுகளிலேற்பட்ட வீழ்ச்சிக்குத் துறைமுகப் போக்குவரத்துக் கணக்கின் வருவாய்களின் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காரணமாயிருந்தது. இக்கணக்கின்மீதான வரவுகளின் பெறுமதி 1967ன் 1,300 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 1,170 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றிருக்கையில், அதே காலப்பகுதியில் இக்கணக்கின் மீதான மிகை 1,150 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1,020 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. கட்புலனுகா வருமானங்களின் பாதகமான இயக்கங்களுக்குக் காரணமாயிருந்த இன்னெரு காரணி, 1967ல் 460 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 420 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்ற கொடைகளின் பெறுமதி வீழ்ச்சியேயாகும்.

சுற்றுலாப் பயணர் செலவிலிருந்து பெற்ற வரவுகள், 1967ன் 60 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 100 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. 1968 மேயில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணர் வருமானங்கள், மிகையூதிய செலாவணி மாற்றுவீதத்திற்கு உரிமையுடையவையாக்கப்பட்டன. 1968 மே—திசெம்பர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணர் வருகைகைகளினதும், வருமானங்களினதும், தரவுகளினதும் ஆய்வு, 1967ன் அதே காலப்பகுதியினதுடன் ஒப்பிடுகையில், ஆளொன்றிற்கு, ஐக்கிய அமெரிக்க டொலர் வருமானங்களில் 25.2 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. மே—திசெம்பர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணரிலிருந்து பெற்ற மொத்த வருமானங்கள் ஐக்கிய அமெரிக்க டொலர்களின்படி கணக்கிட்டால், 1967ன் அதே காலப்பகுதியிற் பெறப்பட்ட தொகைகளிலும் பார்க்க 54 சதவீதம் மேலதிகமாகவிருந்தன. ஆகவே, 1967 மே—திசெம்பர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணரிலிருந்து பெற்ற வருமானங்கள் 7.6 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களாயிருக்கையில், 1968ன் தொடர்பான காலப்பகுதிக்கான வருமானங்கள் 12 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகவிருந்தன. இதேபோல், 1967ன் மே—திசெம்பர் காலப்பகுதியில் ஆளொன்றுக்கான வருமானங்கள் 52.2 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகவிருக்கையில், 1968ல் அதே காலப்பகுதியில் ஆளொன்றிற்கான வருமானங்கள் 65.1 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக மட்டுமேயிருந்தன.

கள்ளச் சந்தைக்குப் போயிருக்கக்கூடிய சுற்றுலாப் பயண வருமானங்களின் சில பகுதி சுற்றுலாப் பயணருக்குத் தற்போது அளிக்கப்படும் கூடிய கவர்ச்சிகரமான செலாவணி விகிதத்தினுல், அலுவலக வழிகளுக்குத் திருப்பப்பட்டுள்ளதென, கிடைக்கப்பெறும் சான்றிலிருந்து தெரிகின்றது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம், சுற்றுப்பயண வருமானங்களின் கள்ள வெளியேற்றல்களைத் தாக்குவதின் முதற்படியைக் காட்டுகின்றது. தற்போது இலங்கையின் சுற்றுலாப் பயண உள்ளமைப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும், அவற்றுடன் இணைந்து சுற்றுலாப் பயணத்தருக்கு அளிக்கப்படும் கூடிய கவர்ச்சிகரமான செலாவணி வீதமும், இம்மூலத்திலிருந்து பெற்ற வருமானங்களின் அளவை வருங்காலத்தில் அதிகரிக்கத் தக்கது. ஆயினும், சுற்றுலா வருமானங்களின் அந்நிய செலாவணி கையளிக்கப்படுமிடத்து ஒரு மிகையூதிய மாற்றுவீதத்தைக் கொடுப்பதன்வாயிலாக அத்தகைய, சுற்றுலாப்பயண வருமானங்களைக் கள்ளச் சந்தைக்குச் செல்லவிடாது குறைக்கக்கூடிய வாய்ப்பு, அத்தகைய மாற்றுவீதம், காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டாலன்றி, வரையறையுள்ளதாயமையுமென்பது கவனிக்கத்தக்கது; இது ஏனெனில் அந்நிய கொடுப்பனவுகளின் மீது, குறிப்பாக கட்புலனுகாக் கொடுப்பனவுகளின்மீது கடுமையான கட்டுப்பாடுகளிலிருக்கும்வரை, சுற்றுலாப்பயணராற் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணிக்கான கேள்வி, கள்ளச் சந்தையில் அதிபோட்டிகரமான செலாவணி மாற்றுவிகித விலையையுண்டுபண்ணுமென்பதனுலாகும்.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தபொழுது அலுவலகச் செலாவணி வீதத்திலும்பார்க்கக் கூடியளவுடைய ஒரு மிகையூதியம் கணிசமான பலதரப்பட்ட கட்புலனுகா வருமானங்களுக்கு வழங்கப்பட்டது. இது, இலங்கைக்குக் கட்புலனுகா வருமானங்களின் ஓட்டத்தை அதிகரிப்பதான ஒரு விடயமாகும். கிடைக்கக்கூடிய தற்காலிகத் தரவுகளின்படி, கட்புலனுகா வருமானங்களின் சில விடயங்கள் புதிய தூண்டுதல்களுக்கு மிகச் சாதகமாக இயங்கியிருக்கையில், ஏனையவற்றைப் பொறுத்தமட்டில், இத்தூண்டுதல்கள் இதுவரை அவ்வளவு பலனைக் கொடுக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக இதுவரை கட்புலனுகா வருமானங்களில் அவதானிக்கப்பட்ட திருத்தம், மொத்த அந்நிய செலாவணி நிலைமையில் குறிப்பிடத்தக்களவு பலாபலனை விளைவிக்கவில்லை. ஆயினும், இத்தன்மைத்தான திட்டங்களின் முழுப் பலாபலன்களும் பெறுவதற்குப் பொதுவாகவொரு குறிப்பிடத்தக்களவு காலதாமதம் இருக்குமாதலாற், காலப்போக்கில் கட்புலனுகா விடயங்களின் செயலாற்றம் கூடிய திருப்தியுடையதாயமையக்கூடும்,

உ. மூலதனக் கணக்கு

(அ) நீண்ட தவணை மூலதனம்

மூலதனக் கணக்கினூலாய விளை 1968ன் வெளிநாட்டு வளங்களின் ஓட்டத்தை உயர்த்துவதற்கு எடுத்த திருப்திகரமான முயற்சியைப் பிரதி பலிக்கின்றது. இலங்கையினது இறக்குமதி ஆற்றலை அதிகரிப்பதன் மூலம் இவ் வெளிநாட்டு வளங்கள் இலங்கையினது பொருளாதார வளர்ச்சி வேகத் திற்குத் தடையாயிருக்கும் சென்மதி நிலுவைகளை மட்டுப்படுத்தின. 1968ல் நீண்டகால மூலதனத்தின் தேறிய உள்ளோட்டம் 2,248 இலட்சம் ரூபாய் களாகும். இது, 1967ம் ஆண்டின் தேறிய தொகையான 1,609 இலட்சம் ரூபாய்களிலும்பார்க்க 39 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப் புக்கு 1968ல் முறையே 2,278 இலட்சம் ரூபாய்களையும், 402 இலட்சம் ரூபாய்களையும் கொண்ட பண்டவுதவியினதும் திட்ட உதவியினதும் உயர்ந்த பயன்பாடே காரணமாகும். இதை, 1967ன் முறையே 2,018 இலட்சம் ரூபாய்களுடனும், 335 இலட்சம் ரூபாய்களுடனும் ஒப்புநோக்கலாம். வள மாக்கிகளினதும், மாவினதும் உதவி நிதியீட்ட இறக்குமதிகளில் அதிகரிப்புக் கள் பதிவுசெய்யப்பட்டன. மாவின் அதிகரித்த இறக்குமதிகள், அரிசியின் கொ.க. விலை தொன்னொன்று 48 பவுணிலிருந்து தொன்னொன்று 70 பவுணிற்குக் கூர்மையாக உயர்வுற்றமையால், ஏற்பட்ட இன்னல்களை மட்டுப் படுத்துவதற்கு உதவியிருக்கையில், வளமாக்கிகளினது அதிகரித்த இறக்குமதி கள் இலங்கை உள்நாட்டு உணவு உற்பத்தியை உயர்த்துவதற்கு உதவியது. மீதிப் பண்டவுதவி பெருமளவிற்கு இயந்திரம், போக்குவரத்துச் சாதனம் போன்ற மூலதனப் பொருட்களை நிதியீட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது.

1967ற்கும், 1968ற்குமிடையிலான உதவிச் செலவுகளின் இவ்வதிகரிப் புக்களுக்கு நாணய மதிப்பிறக்கத்தின் விளைவால் ஒரு குறித்த அளவுடைய பொருட்களுக்கான ரூபாப் பெறுமதி அதிகரித்தமை மட்டுந்தான் காரணமாக விருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்க டொலர்களின் நியதி களின்படி, பண்ட, திட்ட உதவி வருகைகளின் பெறுமதி 1967ன் 494 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 1968ல் 526 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது.

1968ம் ஆண்டிறுதியில், நான்கு பண்டவுதவித் திட்டங்களின்கீழ் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி 6,063 இலட்சம் ரூபாய்களாக விளங் கியது. இக்கடன்கள் பெருமளவிற்கு மூலதனப் பொருட்களை அல்லது மூலப் பொருட்களைப் பெறுவதற்கும், 1968ன் மா இறக்குமதிகளைப் போன்று அத்தி யாவசிய உணவுப் பொருட்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் பயன் படுத்தப்பட்டன. 1968ற் பெறப்பட்ட பண்டவுதவி (கொடைகள் உட்பட) 2,728 இலட்சம் ரூபாய்களாக (458 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) விளங்கியது. இதனில், கடன்கள் 2,554 இலட்சம் ரூபாய்களாகவும் (429 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்), கொடைகள் 174 இலட்சம் ரூபாய்களாகவும் (29 இலட்சம் ஐ.அ. டொலர்களாக) விளங்கின. இக்கடன் கள் கொடையளிக்கும் நாட்டில் மட்டும் கொள்வனவு செய்யப்படுவதற்கு உபயோகிக்கப்படவேண்டியன. 1968ற் பெறப்பட்ட பண்டவுதவியில், 559 இலட்சம் ரூபாய்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும், 1,229 இலட்சம் ரூபாய்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தும், 254 இலட்சம் ரூபாய்கள் சேர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்தும், 139 இலட்சம் ரூபாய்கள் பிரான்சி லிருந்தும், 288 இலட்சம் ரூபாய்கள் யப்பானிலிருந்தும், 64 இலட்சம் ரூபாய்கள் இந்தியாவிலிருந்தும், 130 இலட்சம் ரூபாய்கள் கனடாவிலிருந்தும் பெறப்பட்டன.

1968ற் பெறப்பட்ட திட்டவுதவி 402 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967ம் ஆண்டின் 335 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையிலும்பார்க்க அதிகரிப்பைக் காட்டியது. 1968ல் பெறப்பட்ட திட்டவுதவியின் பெருமளவு பங்கு 1967ற் பெருமளவிற்கு உள்ள மைப்பு முதலீட்டங்களை நிதியீட்டுவதற்குப் பயன்படுத்தியமைக்கெதிராகக்

கைத்தொழில் முதலீட்டத்தை நிதியீட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 1968ல் நிதியீட்டப்பட்ட பிரதான திட்டங்கள் பின்வருமாறு: தொல் கெரியா ஆடை ஆலை (196 இலட்சம் ரூபாய்கள்), மஸ்கெலி ஓயாத் திட்டங்கள் (54 இலட்சம் ரூபாய்கள்), வன்பொருட்கள், சிறு கைத்தொழில் களும் (21 இலட்சம் ரூபாய்கள்), வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை இரும்பு உருக்குச்சாலை, துறைமுக அபிவிருத்தியும், சீமெந்துக் கைத்தொழில் களும் (71 இலட்சம் ரூபாய்கள்), கடற்றொழிற் கூட்டுத்தாபனம், இழு கப்பல்கள் ஆகியன (12 இலட்சம் ரூபாய்கள்), உருக்கு, ரயர், தும்பு ஆலைகள் (14 இலட்சம் ரூபாய்கள்). ஆகவே, திட்டவுதவி ஒதுக்கீடுகள் உள்ளமைப்பு அபிவிருத்திகளிலிருந்து விரைவில் அதிகரித்த உற்பத்திப் பயன்களை அளிக்கக் கூடிய நேரடி உற்பத்தி முதலீட்டங்களுக்கு வழியாற்றப்பட்டன.

1968ன் கடன் மீளக் கொடுப்பனவுகள் 1967னதிலும்பார்க்க அதிக மாகவிருந்தன. திட்டக் கடன்களுக்கான மீளக் கொடுப்பனவுகள் 1967ம் ஆண்டின் 444 இலட்சம் ரூபாய்களுடன் (93 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஒப்பிடுகையில், 1968ல் 590 இலட்சம் ரூபாய்களாக (99 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) விளங்கின. 1968ல் பண்டக் கடன் களுக்கான மீளக் கொடுப்பனவுகள் 73 இலட்சம் ரூபாய்களாக (12 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) விளங்கின.

தனியார் மூலதன மாற்றங்களைப் பொறுத்தமட்டில், உள்வரவு நேரடி முதலீடு 1967ல் 84 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 68 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. இது, வதிவற்றோரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தேயிலைக் கூட்டுநிலையங்களில் முதலீடு செய்வதற்கான நிதிகளின் உட்பாய்வு கள் குறைவுற்றமையினாலாகும். நேரடி முதலீட்டக் கரைவு 1967ல் 131 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 188 இலட்சம் ரூபாய்களுக்கு அதி கரித்தது.

ஆகவே, 1968ல் அரசகரும நீண்டதவணை மூலதனத்தில் 2,366 இலட் சம் ரூபாய்கள் கொண்ட தேறிய உள்ளோட்டம் ஏற்பட்டிருக்கையில், இது 118 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தனியார் நீண்டதவணை மூலதனத்தின் தேறிய வெளியோட்டத்தினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. எனவே, 1968ல் தேறிய உள்வரவு 2,248 இலட்சம் ரூபாய்கள் (377 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஆகும். 1967ல் நீண்டதவணை மூலதனக் கணக்கின்மீதான தேறிய உள்வரவு 1,609 இலட்சம் ரூபாய்கள் (338 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஆகும். ஆகவே, 1967ன் செலா வணி மாற்று வீதத்திலேற்பட்ட மாற்றத்திற்கு இடமளித்தபின்னும், 1967ன துடன் ஒப்பிடுகையில், 1968ன் நீண்டதவணை மூலதனக் கணக்கில் திருத்த மேற்பட்டது.

### ஊ. நாணய இயக்கங்கள்

அட்டவணை II (எ) 6, 1967, 1968ம் ஆண்டுகள் ஒவ்வொன்றினதும் இறுதியிலமைந்த மொத்த அரசகரும வெளிநாட்டுப் பொறுப்புக்களையும், 1968ன் போதான தேறிய மாற்றத்தையும் காட்டுகின்றது. இவ்வாண்டின் போது, சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள், கொடுப்பன வுகளின் அளவைத் தாங்குவதிலும், அத்துடன் 1968 மேயில் அந்நிய செலா வணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப்பட்ட காலத்தில் மேலதிக ஆதரவை அளிப்பதிலும் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்ததா யிருந்தன. மொத்த எடுப்பனவுகள் 2,132 இலட்சம் ரூபாய்களாக (358 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக) இருக்கையில் மீளக் கொள் வனவுகள் 477 இலட்சம் ரூபாய்களாக (80 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) விளங்கின. ஆகவே, சர்வதேச நாணய நிதிக்குரிய தொகை யின் தேறிய அதிகரிப்பு 1,655 இலட்சம் ரூபாய்கள் (278 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஆகும். இவ்வாண்டிற்கான முதல் எடுப்பனவு ஏப்பி றல் 27ந் தேதி செய்யப்பட்டது. ஏற்றுமதி வருமானங்களின் ஏற்றவிறக்கங் களுக்கான சர்வதேச நாணய நிதியின் நிவாரண நிதியீட்டல் வசதிகளின் கீழ் 1,149 இலட்சம் ரூபாய்கள் (அல்லது 193 இலட்சம் ஐக்கிய அமெரிக்க

டொலர்கள்) கொண்ட தொகை இரண்டாவது எடுப்பனவாகப் பெறப்பட்டது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான திட்டம் நடைமுறைக்கு வந்ததும் மூன்றாவது துணைநில் ஒப்பந்தத்தின்கீழ் முதலாவது தவணைப் பணமாக மே 15ல் 625 இலட்சம் ரூபாய்கள் (105 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) கொண்ட மேலுமோர் எடுப்பனவு செய்யப்பட்டது. இத் துணைநில் வசதியின்கீழ் 1968 ஒற்றோபர் 10லும், திசெம்பர் 20லும் ஒவ்வொரு முறைக்கும் 179 இலட்சம் ரூபாய்கள் (30 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) கொண்ட இரண்டாம் மூன்றும் தவணைப் பணங்கள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டின்போது, செய்யப்பட்ட மீளக் கொடுப்பனவுகளுக்கு இடமளித்தால், மொத்த வெளிநின்ற தொகைகள் 5,416 இலட்சம் ரூபாய்களாக (910 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) விளங்கின. 1968 திசெம்பர் இறுதியில், சர்வதேச நாணயநிதியின் இலங்கை ரூபா உடைமைகள் இலங்கை அநுமதிப்பங்கில் 167.8 சதவீதமாக விளங்கின.

இருபுடைக் கொடுப்பனவு உடன்படிக்கை நிலுவைகளின்மீதான இலங்கையின் கடன்பாடு 1967 இறுதிக்குரிய 1,104 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968 இறுதியில் 874 இலட்சம் ரூபாய்களால் 1,978 இசட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. பெரிய மாற்றங்கள், சீனு, ஐ. சோ. ச. கு. கணக்குகளில் ஏற்பட்டன. சீனுவுக்குக் கொடுக்குமதியான நிலுவைகள் 1,109 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்திருக்கையில், அது ஐ. சோ. ச. கு.ற்குக் கொடுக்குமதியான தொகையில் ஏற்பட்ட 222 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியினுல் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. சீனுவுக்கான பொறுப்புக்கள் அதிகரித்தமை, இறக்குமதிகள் 1967ற்குரிய 1,699 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ல் 2,633 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தமையாலாகும். 1968ல் அரிசி, இறக்குமதிகள் 1,914 இலட்சம் ரூபாய்களாகவும், ஆடை வகைகள் 445 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. ஒப்பியல்பாக, 1967ல் இவை முறையே 1,215 இலட்சம் ரூபாய்களாகவும், 246 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன; சீனுவுக்கான ஏற்றுமதிப் பொறுமதிகள் ஏறக்குறைய 1967ம் ஆண்டின் மட்டத்திலேயே இருந்தன. ஐ. சோ. ச. கு. பொறுப்புக்களிலேற்பட்ட 222 இலட்சம் ரூபாய் கொண்ட மாற்றம் பெரும்பாலும் 1968 ஏப்பிறலில் ரூபா 286 இலட்சம் கொண்ட ஒரு சுழல்வுக் கொடுகடன் தீர்ப்பனவினுலாகும்.

## ஏ. வெளிநாட்டு ஒதுக்குநிதிகள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் 1967 முடிவிற்குரிய 4,489 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968 இறுதியில் 4,630 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றன. ஸ்டேர்லிங்கடன் ஆழ்நிதி நிலுவைகள் 1967ன் இறுதிக்குரிய 419 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968 இறுதியில் 456 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றன. எனவே, ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதியினுல் தேற்றப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் 1968 இறுதியில் 4,174 இலட்சம் ரூபாய்களாக இருந்தன. 1968ன் இறுதியில் மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி 2,355 இலட்சம் ரூபாய்களாகவிருக்கையில், அரசாங்க, அரசாங்க முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் மொத்த ஒதுக்குகள் 702 இலட்சம் ரூபாய்களாகவும், வர்த்தக வங்கிகளின் வெளியூர் நிலுவைகள் 1,573 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின.

ரூபா 1,220 இலட்சம் கொண்ட அடிப்படைப் பணக்குறை இருந்தபோதும், இலங்கையினது வெளிநாட்டு ஒதுக்குகளின் அதிகரிப்புக்கு, இவ்வாண்டின்போது பல்வேறு கடன்பாட்டு ஒதுக்குகளை இலங்கை பயன்படுத்தக்கூடியதாயிருந்தமையே முழுக் காரணமாகும். எடுத்துக்காட்டாக, வேறிடத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, 1968ல் சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற தேறிய எடுப்பனவுகள் 1,655 இலட்சம் ரூபாய்களாக விளங்கின.

இலங்கையினது வெளிநாட்டு ஒதுக்குகளின் குறைந்த மட்டம் அண்மையாண்டுகளில் ஓரளவு கவனத்தை ஈர்க்கத்தக்க விடயமாகக் காணப்பட்டது. கொடுப்பனவுகளின் சாதாரண போக்குகளுடனும், தாமதங்களுடனும் சேர்ந்து வேலைநிறுத்தங்கள் போன்ற அவசரகால நிலைமைகளினுல் தோன்றும்

நிலையற்ற தன்மைகள், 'இலங்கையினது வெளிநாட்டுச் சொத்துக்களின் ஆளுகையை ஒரு சிக்கலான விடயமாகிற்று. இவ்விடர்களினால், மத்திய வங்கி, அந்நியச் செலாவணிக் கொடுகடன் வசதிகளைப் பெறுவதற்காக வெளி நாட்டிலுள்ள பல வங்கிகளுடன் தொடர்புகொண்டது.

## அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்

1968 மே 6ந் திகதி மத்திய வங்கியின் சிபார்சில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இத்திட்டமானது அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியால் இயக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சில பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்வதற்கும், சில உட்புற பணவனுப்பல்களுக்கும் எதிராக வர்த்தக வங்கிகளுக்கு அந்நிய செலாவணியைக் கையளிப்போர்க்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, இரப்பர், தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், கொப்பரா, உடன் தேங்காய் ஆகியவற்றினால் வரும் அந்நிய செலாவணி வரவுகள் இத்திட்டத்தின் நன்மைகளுக்கு உரிமையுடையனவல்ல. குறிப்பிட்ட சில பணவனுப்பல்களுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட சில பொருட்களின் கொடுப்பனவுகளுக்கும் சமமுகப்புப் பெறுமதியுடைய சான்றிதழ்களை வர்த்தக வங்கிகளுக்குக் கையளித்து, அவை விற்கும் வீதத்தில் அந்நிய செலாவணியை, இறக்குமதிச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைகளுக்கு உட்பட்ட கொள்வனவு செய்வதற்குச் சான்றிதழ்கள் வைத்திருப்போர் உரிமையுடையவராவர்கள்.

இரண்டு வகுப்புகளாக வணிகப்பொருட்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன, அ, ஆ வகுப்புகளாகும். அலுவலக வீதத்தில் ‘அ’ வகுப்பிற் செய்யப்பட்ட இறக்குமதிகளுக்குக் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டியனவாகும். அதே வேளையில் ‘ஆ’ வகுப்பு இரண்டு துணைப்பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. முதற்பிரிவு அந்நிய செலாவணி வரவுசெலவுத் திட்ட அநுமதிப்பங்கு ஒதுக்கீடுகளுக்கு உட்பட்டதாயும், அதே வேளையில் சான்றிதழ்கள் கையளிக்கப்பட வேண்டியவையாயும் உள்ளது. இரண்டாவது பிரிவு அந்நிய செலாவணிக் கொடுப்பனவின் முழுப் பெறுமதிச் சான்றிதழ்கள் கையளிக்கப்பட வேண்டிய கட்டற்ற பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளுமாகும்.1 வர்த்தக இறக்குமதிகளில் முன்பு விதிக்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் நீக்கப்பட்டன. ‘அ’ வகுப்பிற்குள் உள்ளடங்கும் உதவி இறக்குமதிகளுக்கு உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், ‘ஆ’ வகுப்பைச் சார்ந்த இரண்டாவது பிரிவுக்குள் அடங்கும் (அதாவது கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகள்) உதவி இறக்குமதிகளுக்கு 20 சதவீத இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணம் விதிக்கப்பட்டது. எனினும், இத்தகைய இறக்குமதிகளின் கொடுப்பனவுகளுக்கு அந்நிய சான்றிதழ்கள் கையளிப்புத் தேவையில்லை என்றும் தீர்க்கப்பட்டது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதைத் தொடர்ந்து இறக்குமதித் தீர்வைகளின் அமைப்பிற் சில எதிரிடை மாற்றங்கள் செய்யப்பட்டன. நிதிவிலக்களிக்கப்பட்ட குறிக்கப்பட்ட சில வகுப்புகள் தவிர்ந்து, ஏனைய எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் சமபெறுமதியுள்ள சான்றிதழ்கள் கையளிக்கப்படவேண்டும்.

அரசாங்க வர்த்தமானியில் (கசெற்றில்) பிரசுரிக்கப்பட்ட இத்திட்டம் பற்றிய முழு விவரங்கள் பின்னிணைப்பு I, பிரிவு (ஆ)வில் கிடைக்கத்தக்கதாயுள்ளது.

---

1. தனியாள் இறக்குமதி உத்தரவுச் சீட்டின் தடையில்லாது அனுமதிக்கப்படும் இறக்குமதிகளே கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளாகும்.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின் பொருளியல் அடிப்படைக் கோட்பாட்டையொட்டி இவ்வறிக்கையிற் சென்மதி நிலுவை கள்பற்றிக் கூறும் முன்னுரைப் பிரிவில் ஆராயப்பட்டுள்ளது. நாட்டில் அந்நிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல் மிகக் கடுமையாக வரையறைசெய்ததி னுலும், அந்நிய செலாவணி வருவாய்களின் அளவிலேற்பட்ட தொடர்ச்சி யான வீழ்ச்சியினுலும் நாட்டிலுள்ள வளங்களை முற்றுகப் பயன்படுத்த முடியாத நிலையிற் பொருளாதார உற்பத்தித் தொழிற்பாடுகளிலும், கைத் தொழில் ஆற்றல்களிலும் கணிசமான வீழ்ச்சியையேற்படுத்தியதே இத்திட் டம் உருவாகியமைக்குச் சுருங்கிய காரணமாயமைந்திருந்தது. இறக்குமதி உள்ளிடுகைகளில் இறக்குமதிகளைத் தளர்த்துவதினுலேயே குறிப்பாகக் கைத் தொழிலுக்கும், வேளாண்மைக்கும் உரிய மூலப் பொருட்களினதும், முதலீட் டப் பொருட்களினதும் விலையை, அந்நிய செலாவணியின் உண்மைத் தட்டுப் பாட்டுப் பெறுமதிக்கு ஏற்ப அமையச்செய்தல் பொருளாதாரத்தில் உள்ள கைத்தொழில்கள் திறமையாகவும் வலிமையாகவும் உற்பத்திசெய்யத் தூண்டுதலாயிருக்குமெனக் கருதப்பட்டது.

ஏற்றுமதிச் சந்தையிற் போதியளவு போட்டியை ஏற்படுத்தத்தக்க பல மரபுவழியல்லாத ஏற்றுமதி உற்பத்திகள் குறிப்பாகக் கைத்தொழில் உற்பத்திகள் அன்று நிலவிய கடுமையான அநுமதிப் பங்குவீதத் திட்டத்தினுல் மிகச் சிறியளவே கைத்தொழில் மூலப் பொருட்களைப் பெற்றதினுல் தம் ஏற்றுமதி ஆற்றலில் தடைகண்டன. சென்ற சில காலமாகச் சிறிய வேளாண் மை உற்பத்தி ஏற்றுமதித் துறை இலாப செலாவணி அடிப்படையில் ஏற்று மதிசெய்வதில் அதிகரித்த இன்னல்களைக் கண்டது. இந்தக் காரணி இக் கைத் தொழில்களில் அதிகரித்த நிலையில் முதலீடு செய்யவேண்டும் என்ற கவர்ச்சி யைக் குறைத்தது அல்லது மட்டுப்படுத்தியது. கூட்டுறவு அல்லாத அடிப் படையிலேதான் சிறிய விவசாய உற்பத்திப் பிரிவில் பெரும் பகுதிகள் அமைந் துள்ளமையால் அந்நிய செலாவணி வருவாய்கள் கடும் உயர்ந்த மிகை ஊதியத்தை இத்துறை பெற்றுத் தன் வருவாய்களை அதிகரிப்பதினுல் வரு வாய்களைப் பரந்த அடிப்படையில் வழங்குவதற்கு வழிவகுக்கும் என்று கருதப்பட்டது. அதேபோல அண்மை ஆண்டுகளில் நிறுவப்பட்ட பல இறக்கு மதிப் பதிலீட்டு கைத்தொழில்களிற் பெருமளவு இலங்கையர்கள் பணி யாற்றினர். ஆனுல், அவர்கள் தம் தொழிற்டுகளை விரிவுபடுத்த முடியாத தோடு அவர்களின் தொழிற்பாடுகளும் கணிசமானளவு குறைக்கப்பட்டது. பழைய உற்பத்தி இறக்குமதிகள் அடிப்படையில் அந்நிய செலாவணி பங்கிடப் பட்டு வழங்கும் கடும் கட்டுப்பாட்டு அமைப்பே இந்நிலைமையை உருவாக் கியது. அவசிய இறக்குமதிகளை எளிதில் இத்தகைய நிறுவனங்கள் பெறு மொரு திட்டத்தை உருவாக்கின. அவைகள் தம் உற்பத்தியை வேகப்படுத்துவ தோடு தொழிற்றுறையிலும், வருவாய்களிலும் தொடர்பான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் கருதப்பட்டது. ஏனைய விடயங்களில், தன் உண்மை விலையோடு அந்நிய செலாவணியின் விலை படிப்படியாக முன்னேறும் இணைப்பு உள்ளூரிலுள்ள இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்தியின் வேக திற்குத் துணை செய்யும் என்று நம்புவதற்குக் காரணமிருந்தது. இன்று நிலவும் அலுவலகச் செலாவணி வீதத்தின்படி பயன்தரமாட்டாது என்று கருதப்படும் மூலப் பொருட்களுக்கும் நடுத்தரப் பொருட்களுக்கும் குறிப்பாக இந்நிலைமை பொருந்தும்.

அந்நிய செலாவணியின் உண்மையான தட்டுப்பாட்டுப் பெறுமதிக்கு முரண்பாடான முறையிலே செலாவணி மாற்றுவீதம் நிலவியதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் இதனுல் அந்நிய செலாவணியின் கணிச மான வளங்கள் கள்ளச் சந்தைக்குத் திருப்பப்படும் நிலையும் ஏற்பட்டது. கணிசமான காலம் இலங்கையின் வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களும் கட்டுப்பாட்டிற்கு வந்ததினுல் கள்ளச் சந்தை பெரும் நயத்தினைப் பெற்றது. இதனுல் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் கள்ளச் சந்தைக்குத் திருப் பப்படும் தூண்டுதல் நிலவியது. குறிப்பாகப் பல சேவை விடயங்களில் எடுத்துக்காட்டாக சுற்றுலா செலாவணியில் இந்நிலைமை நிலவியது. அந்நிய

செலாவணியிலுள்ள தட்டுப்பாட்டுப் பெறுமதிக்கு நெருங்கிய தொடர்பாக வுள்ள தொகைகளில் மிகையூதியம் வழங்குவதினாற் செலாவணியில் நடை பெறும் தவறான செயலாற்றத்திற்குக் கிடைக்கும் தூண்டுதலைக் குறைக்க முடியுமென்று கருதப்பட்டது.

1968ல் ஆக எட்டு மாதங்களாகத்தான் இந்த அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் நடைமுறையிலிருந்தது. இதனாலித்திட்டம் பற்றிய முடிவான விளைவைக் கூறுவதற்கு இது நடைமுறையிலிருந்த காலம் போதாததாகும். ஆனால், இலங்கையிற் சென்மதி நிலுவைகளின் இணையும் போக்குகள்பற்றி இவ்வறிக்கையின் முன்னுரைக் குறிப்பிற் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதற்கமைய நாணயத் துறையிலும், அரசிறைத் துறையிலும், உற்பத்தித் துறையிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளோடு இத் திட்டத் தைத் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இது வரவேற்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதென்பதற்குப் போதிய சான்றுகளுள.

வெவ்வேறு வகைப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதிகளின் தொழிலாற்றல்கள் பற்றியும், உள்நாட்டு உற்பத்தி, கைத்தொழிலுற்பத்தி பற்றியும் விரிவான போக்குகளைப் பகுத்து ஆராயும்போது குறிப்பாக இத்திட்டம் நடைமுறைக்கு வந்த நாட்தொட்டு அதிகரித்த அளவில் மூலப்பொருட்களையும் நடுத்தரப் பொருட்களையும் முதலீட்டப் பொருட்களையும் பெறும் வாய்ப்பைக் கொண்ட தொழிற்றுறைகள் காட்டிய நடைமுறை முன்னேற்றம் இத்திட்டத்தைச் செயற்படுத்தியததினாலேற்பட்ட விளைவேயென்று எடுத்துக்காட்டுவதுபோலத் தோன்றுகிறது. அதே வேளையில் அதிகரித்த விரைந்த உற்பத்தியானது தொடக்கத்திலேற்பட்ட அதிகரித்த விலைகளைத் தணிப்பதற்குத் துணைசெய் தது. இதன் விலைவாகவேற்பட்ட உற்பத்தித்திருத்தம் பல பொருட்களின் விலைகள் குறைவதற்கும், இறக்குமதிகளைத் தளர்த்தியதனால் உற்பத்தித் துறையிற் போட்டிப் போக்கினைத் தூண்டியதினாலும் நாட்டின் தட்டுப் பாடான செலாவணி வளங்களைப் பொருத்தும் முறையிலும் தகுந்த அளவு களிலும் அமைப்பதற்குத் துணைசெய்தன. மேலும் இறக்குமதிகள் கிடைக்கத் தக்கதாயிருக்கின்றனவென நம்பிக்கை ஏற்பட்டதினாற், கொடுப்பனவுகளின் ஒப்பரவில்லாத வீக்கத்தைக் குறைக்கும் முறையில் இறக்குமதிகள்மீது விடுக்கப் படும் வேண்டுகோளில் மெல்லோட்டம் காணப்படும். ஒப்புநோக்குகையில், (சென்ற ஆண்டில்) உத்தரவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டபோது நாட்டில் அந் நிய செலாவணி ஒதுக்குகளைப் பாதிக்கும் அளவிற்கு விரைந்து கோரப்படும் நெருக்கடி நிலைமை நிலவியமை கவனிக்கத்தக்கது.

1968ன் ஏற்றுமதி இறக்குமதிகளின் கூட்டுப் பெறுமதிகளை மேலெழுந்த வாரியாக ஆய்வுசெய்வதினால் அவ்வாண்டில் ஏற்பட்ட மாற்றங்களின் உண்மை நிலையைக் காணமுடியாது. அதே நேரத்தில் உண்மையான மாத்த ஏற்றுமதிகளின் பெறுமதிகள் 1967ல் 3,470 இலட்சம் ஐ.அ. டொலர் களிலிருந்து 1968ல் 3,320 இலட்ச அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சி யுற்றது. அதே வேளையில் அவ்வாண்டில் இறக்குமதிகளின் பெறுமதிகள் இன்னும் அதிகரித்த முறையில் அமெரிக்க டொலர் 4,170 இலட்சத்தில் இருந்து, அமெரிக்க டொலர் 3,930 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதி இறக்குமதி உள்ளடக்கத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இது. இத் திட்டத்தை மதிப்பிடுவதற்கு ஓரளவு சார்பான குறிகாட்டியாக விளங்கியது. ஆனால், அதே வேளையில் 1968ல் உற்பத்தியையும் ஆற்றலையும் பெருக்கு வதற்கு எடுக்கப்பட்ட ஏனைய துணையான நடவடிக்கைகளால் ஏற்பட்ட நன்மையான விளைவுகளை நிர்ணயிக்கமுடியாமலிருக்கின்றது.

1967, 1968ம் ஆண்டுகளிற் புதிய கைத்தொழில் தயாரிப்புக்களை உள்ள டக்கிய இலங்கையின் சிறிய உற்பத்தி ஏற்றுமதிகளின் அளவுப் பெறு மானம் ஆகியவற்றை அட்டவணை *II* (எ) 7ம், அட்டவணை *II* (எ) 8ம் காட்டுகின்றன. 1967 நவெம்பரிலும் 1968 மே மாதத்திலும் செய்யப்பட்ட செலாவணிச் சீர்திருத்தங்களிலேற்பட்டுள்ள விளைவை மதிப்பிடுவதற்கு வாய்ப் பாக அமெரிக்க டொலரிற் பெறுமதிகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாண்டு களிலேற்றுமதி செய்யப்பட்ட 30 மூலப் பொருட்களினதும், 17 தயாரிக்கப் பட்ட பொருட்களினதும் தரவினை இவ்வட்டவணைகள் ஆராய்ந்துள்ளன.

வணிசப் பொருட்களின் ஏற்றுமதிகள்

அமெரிக்க டொலர் நியதியில் இப்பொருட்களின் கூட்டுத் தொகையான ஏற்றுமதிப் பெறுமானத்திற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படவில்லை. ஆயினும், முதன்மைப் பொருட்களுடன் ஒப்பிடுகையில், தயாரிப்புகளிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு வீதம் காணப்பட்டது. இந்தப் பரந்த வகுப்புகளுக்குள்ளே பல்வேறு பண்டங்களுக்கிடையில் தொகையிலும், பெறுமதியிலும், சார்பான மாற்றல்கள் காணப்பட்டன. இந்த வீழ்ச்சிகள், 1967 உடன் ஒப்பிடும்போது, 1968ல் ஏற்பட்ட சிறிய உற்பத்தி ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியிற் சாதகமான விளைவுகளைத் திரிபுபடுத்தி அமைத்தன.

தயாரிக்கப்பட்ட பொருட்களின் துறையிலேயே பெறுமதியும் உற்பத்தியும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தன. இரும்பும், உருக்குப் பொருட்களிலும், அலுமினியம் உற்பத்திகளிலும், சப்பாத்து, காலணிகளிலும், சொக்களேற்றிலும், கொக்கோ உற்பத்திகளிலும், ஆடைகளிலும், போத்தலில் அல்லது தகரத்தில் இடப்பட்ட பழங்களிலும், கிளிசறினிலும், தேயிலை இயந்திரங்களிலும் பெறுமதி நியதிகளிற் பெருமளவு விரிவு காணப்பட்டன. தயாரிப்புக்களின் ஏற்றுமதி விரிவினுல் இலங்கையின் டொலர் வருவாய்களிற் தேறிய கூட்டுத்தொகை அமெரிக்க டொலர் 12 இலட்சமாக விளங்கியது. இப்பண்டங்களின் உற்பத்தி அளவில் சார்பான அதிகரிப்புகள் ஏற்பட்டதென்பதைக் காட்டும் அட்டவணே, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக இன்றியமையாத உள்ளிடுகைகளும் மூலப் பொருட்களும் உயர்ந்த அளவிற் கிடைக்கத்தக்கதாக இருந்தமையினுற் பயன்படுத்தப்படாத ஆற்றலை அந்தக் கைத்தொழில்கள் உயர்ந்த அளவிற் பயன்படுத்துவதற்கு உதவியாயிருந்ததுவென்பதற்கான சான்றுகளைத் தருகிறது.

முதன்மைப் பொருட்களைப் பொறுத்தவரையில் குறுகியகால நிரம்பல் தாமதித்துச் செல்லும் இயல்புகளினுற் பல பண்டங்களின் ஆக்கவலு செலாவணியிற் கொண்டுவரப்பட்ட இரண்டு சீரமைப்புகளினுலும் உந்தப்பட்ட தூண்டுதல்களுக்கு இணங்க முடியாமற் போயின. எனவே தயாரிப்புப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகளின் வளர்ச்சிவீதத்துடன் ஒப்பிடுகையில் இத்தகைய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியளவுகளின் அதிகரிப்பு விகிதம் மட்டமாகவேயிருந்தது. எனினும், முதன்மை உற்பத்திப் பொருட்களிற் பல பண்டங்களின் ஏற்றுமதிகள் 1967ற்கும் 1968ற்கும் இடையிற் கணிசமான அளவு அதிகரித்தன. இதனுல் மிளகு ஏற்றுமதியின் பெறுமதி ஏழு மடங்கால் அதிகரித்தது. அத்துடன் ஏனைய உற்பத்திகளான கறுவா இலை எண்ணெய் கறுவாத் துண்டுகள், கொக்கோ, இலவம் பஞ்சு, சாதிக்காய் ஆகியவற்றின் அளவு அதிகரிப்பு 50 சதவீதம் தொட்டு 100 சதவீதத்திற்கு மேலாக வேறுபட்டது. எனினும் ஏனைய சில விடயங்களில், பருவநிலையின் விளைவுகள், மற்றும் ஏனைய காரணிகளான பயிற்செய்கைத் திருத்தங்கள், திருந்திய போக்குவரத்து, திருந்திய அமைப்பு, முகாமை ஆகியவற்றில் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து இத் திட்டம் ஏற்படுத்திய விளைவுகளை தனித்துப் பிரித்துப் பார்ப்பது கடினமாகும். எனினும், விலைத் தூண்டுதல்களை உருவாக்குவதற்கு 1968 மே மாதத்திற் செய்யப்பட்ட செலாவணிச் சீர்திருத்தம், புதிய முதன்மை உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த ஏற்றுமதிகளுக்கு உற்சாகம் அளித்ததென்று ஊகிப்பை உறுதிப்படுத்துவதற்கு ஓரளவு சான்றுகள் உள. எடுத்துக் காட்டாக 1967ல் விறைக்கப்பட்டோ குளிர் ஊட்டப்பட்டோ உள்ள மீன் ஏற்றுமதி செய்யப்படாதிருக்கையில், 1968ல் இத்தகைய ஏற்றுமதிகள் அமெரிக்க டொலர் 76 ஆயிரத்திற்கு வகைதந்தன. அதுபோன்றே கொக்கோ ஏற்றுமதிகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 870 ஆயிரமாகவிருந்து, அமெரிக்க டொலர் 12 இலட்சமாக அதிகரித்தது. அதே வேளையில் இல்மனைட் ஏற்றுமதிகள் அமெரிக்க டொலர் 319 ஆயிரமாயிருந்து, அமெரிக்க டொலர் 435 ஆயிரமாக உயர்ந்தது.

1968ன் சிறிய உற்பத்தி ஏற்றுமதியின் கவலைதரும் அம்சம், இரத்தினக் கற்கள் இரணைச் சார்புடைய கற்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளையொட்டியதேயாகும். அளவு அடிப்படையில் இக் கற்களின் தொகை 1967ல் 25 ஆயிரம் கரட்டாய் இருந்து, 1968ல் 196 ஆயிரம் கரட்டுக்கு அதிகரித்ததெனினும், அவற்றின் பெறுமதி அமெரிக்க டொலர் 729 ஆயிரமாயிருந்து, அமெரிக்க டொலர் 341 ஆயிரமாக வீழ்ச்சியுற்றுள்ளது. வெவ்வேறு ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்படும் அருங் கற்களின் தன்மை வேறுபடக்கூடுமானதால் ஏற்றுமதிப் பெறுமானமானது ஏற்றுமதித் தொகையோடு நேரிய தொடர்புடையதாயிருக்கத் தேவையில்லையாயினும், 1968ன் பெறுமானத்தில் ஏற்பட்ட கணிசமான அளவுடைய வீழ்ச்சி விளக்க முடியாததொரு விடயமாகும்.

## கட்புலனுகா வருவாய்களும் தனியார் மூலதன உள்ளோட்டங்களும்

கூடிய தூண்டுதல்களைத் தரத்தக்கதொரு செலாவணிச் சீராக்கத்திற்கு பெருமளவு இணங்கும் கட்புலனுகா வருவாய்த் துறைகளுள் சுற்றுலா வருவாய்கள் தனியார் மூலதனம், உத்தியோக வருவாய்கள் ஆகியவை அடங்கும். கட்புலனுகாக் கணக்கில் உள்ள ஏனைய துறைகளான காப்புறுதிக் கட்டுப் பணம் முகவர் தலைமை அலுவலகச் செலவுகள், இளைப்பாறற் சபம்பளம் ஆகியன ஒப்பந்தத் தன்மையுடையனவாய் இருப்பதினுல் அவை தனியாகவே முடிவுசெய்யப்பட வேண்டும். சுற்றுலா வருவாய்களைப் பொறுத்தவரை, சான்றுகள், கூடிய நம்பிக்கையைத் தருகின்றன. 1967, 1968ம் ஆண்டுகளின் மே தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின் சுற்றுலாச் செலவின் வருவாய்களைக் கீழேயுள்ள அட்டவணை தருகின்றது. 1968ம் ஆண்டின் இம்மாதங்களிற் பெறப்பட்ட வருவாய்கள் படிப்படியாக அதிகரித்திருப்பது கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

சுற்றுப்பயணத்தர் வருவாய்கள் — 1967உம் 1968 மே — திசெம்பர்

ஆயிரம் ரூபாய் ஐ. அ. $

| | மே | யூன் | யூலை | ஓகத்து | செத்தம்பர் | ஒற்ரோபர் | நவெம்பர் | திசெம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1967 | 111 | 86 | 86 | 70 | 131 | 81 | 124 | 94 | 783 |
| 1968 | 117 | 82 | 141 | 125 | 113 | 172 | 197 | 280 | 1,227 |
| % மாற்றம் | 5 | –5 | 64 | 79 | –14 | 112 | 59 | 198 | 57 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1968ம் ஆண்டில் சுற்றுலாச் செலவில் ஏற்பட்ட வருவாய்கள், அமெரிக்க டொலர் 7.8 இலட்சத்தில் இருந்து அமெரிக்க டொலர் 12 இலட்சமாக அதிகரித்தன. பெறுமதி நியதியில் இவ்வதிகரிப்பு சிறிதாயிருப்பினும், ஒப்பியல் நிலையில் இது கணிசமானதாகும். இது 1967ம் ஆண்டின் மட்டத்தை விட இது 57 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது. 1968 மேயிற் கொண்டு வரப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தினுற் செலாவணி சுற்றுலா வருவாய்கள் மிகை ஊதியச் செலாவணி மாற்றுவீதத்திற்கு உரிமையுடையனவாக ஆக்கப்பட்டன. 1968 மே—திசெம்பர் காலப்பகுதிக்குரிய தரவை ஆராயும்போது தனியாளுக்கான அமெரிக்க டொலர் வருவாய்கள் 1967ம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 25.2 சதவீதத்தால் உயர்ந்திருப்பது தெரியவருகிறது. 1969 மே-திசெம்பர் காலப்பகுதியில் தனியாளுக்கான வருவாய்கள் அமெரிக்க டொலரில் 65.1 ஆக விளங்கியது. 1967ன் அதே காலப்பகுதியில் அமெரிக்க டொலர் 52.2 ஆக இருந்தது.

அந்நிய செலாவணி உரிமைத் திட்டத்தின் நன்மைகளுக்கு உரிமையுடைய தனியார் மூலதன இயக்கங்கள் 1968ன் பின்னரைப்பகுதியில் 1967ன் அதே காலப் பிரிவிலும்பார்க்க 23 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. அந்நிய செலாவணி அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பு அமெரிக்க டொலர் 3,49,515 ஆக விளங்கியது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் ஏற்படுத்திய தூண்டுதல்கள் தனியார் மூலதனங்களின் அதிகரித்த உள்ளோட்டத்திற்கு உதவியாயிருந்ததென்று கூறுவது கடினமாகும். ஏனெனில் அநுமதி அளிக்கப்பட்ட கைத்தொழிற் றிட்டங்களுக்காக அந்நிதிகள் வழிப்படுத்தப்பட்டிருக்கலாம். நானுவிதக் குழுவில் வெளிநாட்டுத் தொழிலின் பயிற்சியாளர் சேவைகள், உழைப்புக்கள், தரகுகள், முகவர் செலவுகள் ஆகியவையொட்டிய வருவாய்களின் உள்ளோட்டம் அதிகரித்தது.

கூட்டாகப் பார்க்கையில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழுக்கு உரிமையுடைய கட்புலனுகா வருவாய்களில், சில துறைகள் சாதகமாக இணங்கியுள்ளன. இதற்கமைய இத்துறைகளுக்குரிய கட்புலனுகா வருவாய்கள் 1968ன் பின்னரைப்பகுதியில் கணிசமான அளவு அதிகரித்தன. எனினும், ஏனைய பொருட்களைப் பொறுத்தவரை அவை ஈட்டிய வருவாய் போதியளவு நன்மையைத் தரவில்லை. இந்த வகுப்புக்களைச் சார்ந்த வருவாய்கள் ஒப்பந்தத் தன்மையுடையனவாய் இருப்பதனுல், அவை தனியாகவே முடிவுசெய்யப்பட வேண்டியிருப்பதும் ஒரு காரணமாயிருக்கலாம்.

வணிகப்பொருட்கள் இறக்குமதிகள்

‘ஆ’ வகுப்பு இறக்குமதிகளுள் கட்டற்ற பொது உத்தரவுச் சீட்டின் கீழும் அநுமதிப் பங்கு முறையின்கீழும் 1968ற் செய்யப்பட்ட விடயங்களினுல் எழுந்த மொத்தக் கொடுப்பனவுகளை அட்டவணை II (எ) 9 சுருக்கிக் காட்டுகிறது. தற்காலிகத் தரவுகளின்படி கொடுப்பனவுகளின் மொத்தம் 1,849 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. பொருளாதார வகுப்புகளாக இறக்குமதிகள் வகுக்கப்பட்டபோது, மொத்தத்தில் நடுத்தரப் பொருட்களின் சதவீதப் பங்கு 51.1 சதவீதமாகவும், முதலீட்டுப் பொருட்களின் பங்கு வீதம் 26 சதவீதமாகவும் விளங்கின. அதே வேளையில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 23 சதவீதமாக விளங்கியது. இறக்குமதிகளின் பிரதான வகுப்புகளுள் இயந்திரம் போக்குவரத்துச் சாதனங்கள் (25.9 சதவீதம்), தயாரிப்புப் பொருட்கள் (41.8 சதவீதம்), இரசாயனப் பொருட்கள் (11.2 சதவீதம்) ஆக இருந்தன. நானுவிதத் தயாரிக்கப்பட்ட பொருட்களும் உணவு இறக்குமதிகளும் முறையே 5.9 சதவீதமாகவும் 7.9 சதவீதமாகவும் விளங்கின.

எனவே, ‘ஆ’ வகுப்பின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டவற்றுள் நடுத்தர, முதலீட்டப் பொருட்கள் 77 சதவீதத்திற்கு மேலாகவும், நுகர்வுப் பொருட்கள் 23 சதவீதமாகவும் விளங்கியதென்பது நோக்கத்தக்கது. தனியாகச் சுட்டிக் காட்டமுடியாத நிலையில் அநுமதிப்பங்கின்கீழ் ‘ஆ’ வகுப்பு இறக்குமதிகள் செய்யப்பட்டிருப்பதினுல், அவையொட்டிய தரவுகள் அதிகரித்த மட்டுப்பாட்டுடன் நோக்கத்தக்கது. இவை யாவும் புள்ளிவிவரங்களிலிருந்து அந்த இறக்குமதிகள் நீக்கப்பட்டாற் கட்டற்ற பொது உத்தரவுச் சீட்டின்கீழ் செய்யப்பட்ட உண்மையான இறக்குமதிகள் புள்ளிவிவரங்கள் காட்டுவதிலும்பார்க்க மிகக் குறைந்தளவாகவே இருக்கும் என்பது தெரியவரும்.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் நடைமுறைக்கு வந்ததன் விளைவாற் கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் வைக்கப்பட்ட பொருட்களின்பேரில் 1968 மே—திசெம்பர் காலப்பகுதியிற் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் வகுப்புக்களை அட்டவணை II(எ) 10 பரந்த விவரத்துடன் தருகின்றது. இவ்விறக்குமதிகளின்பேரில் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் மொத்தப் பெறுமதி 3,062 இலட்சம் ரூபாய்களாக (514 இலட்சம்

ஐ. அ. டொலர்கள்) விளங்கிற்று. இவைகளின் பொருளாதார அடியிலான பகுப்பு, நுகர்ச்சிப் பொருட்கள் 16.6 சதவீதத்துக்கு வகைகூற, நடுத்தரப் பொருட்களும் முதலீட்டுப் பொருட்களும் முறையே 56.2 சதவீதத்துக்கும் 27.1 சதவீதத்துக்கும் வகைகூறினதென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இத் தரவுகளின் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், உச்சமான காலப் பகுதியாகிய யூலை, ஓகத்து மாதங்களில் 580 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் தொகை அக் காலப்பகுதிகளுக்குப் பின்பு குறைவுற்றது. 1968 ஓகத்துக்குப் பிந்திய காலப் பகுதியில் திறக்கப் பட்ட நாணயக் கடிதங்களின் பெறுமதி மாதமொன்றுக்கு 300 இலட்சம் ரூபாய்களுக்கும் 400 இலட்சம் ரூபாய்களுக்குமிடையில் ஏறியிறங்கிற்று. இவ்வடிப்படையில், நாணய நிதிக் துறைகளில் ஏதேனும் பெரிய மாற்றங்கள் கையாளப்படாதிருப்பின், கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதி களைப் பொறுத்தவரையிலான நாணயக் கடிதங்களுக்கான ஆண்டுக் கேள்வி 5000 இலட்சம் ரூபாய்களுக்கு மேற்படாது. 1968ம் ஆண்டுத் தரவின் அடிப்படையில், இத்தொகை வணிகப் பொருள் இறக்குமதிக் கொடுப்பனவுப் பெறுமதிகளில் ஏறக்குறைய 21 சதவீதமாகும்.

1968 மே—திசெம்பர் காலப்பகுதியில் கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளின் பேரில் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் உண்மை யான பெறுமதி, அவ்வாண்டின் இலங்கையினது மொத்த வணிகப் பொருள் இறக்குமதிகளில் 13 சதவீதமாக விளங்கிற்று. கட்டில்லாப் பொது உத்தர வுச் சீட்டின்கீழுள்ள இறக்குமதிகள் அநேகமாக அத்தியாவசிய நடுத்தர முதலீட்டப் பொருட்களையும், ஓரளவுக்குத் தூண்டுதற் பொருட்களையும் கொண் டிருப்பதால், அப்பொருட்கள் உண்மையான தட்டுப்பாட்டு விலைக்குக் கிட்டத் தட்ட கிடைக்கக்கூடியதாகவிருத்தல் முக்கியமான பொருளாதார நிதி விளை வுகளையுண்டுபண்ணும். முதலாவதாக, இது அநுமதிப் பங்குச் சிறப்புரிமை யைப் பெற்ற இறக்குமதியாளர்களுக்குத் தட்டுப்பாட்டு நிலையினூற் கிடைத்த இலாபங்களை அப்புறப்படுத்தும். இரண்டாவது, முயற்சிகளின் தேவைக்காக இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகைகள் பலனளிக்கக்கூடியனவாகவும், இலாப முடையனவாகவும் இருந்தாலே இவைகள் இறக்குமதி செய்யப்படும் என் பதை இது உறுதிப்படுத்தும். முடிவாக, பொதுவாகக் கூறின் கட்டுப்பாடுகள் இல்லாது இறக்குமதிகள் பெறமுடியுமாயின் அவற்றைப் பாவிப்பவர்கள் இதற்கான அந்நிய செலாவணியைச் சிக்கனமாகவே பாவிப்பார்கள் ; இது ஏனெனில், அவர்கள் இறக்குமதி, செலாவணிக் கட்டுப்பாடுகள் கடுமையாகக் கையாளப்படுமென்றெதிர்பார்க்கும்போது பொருட்களைக் கையிருப்புக்களில் வைப்பதுபோன்ற செயல்களைச் செய்யாது, இறக்குமதிகளின் அசைவினைத் தடையில்லாது இயங்கச் செய்வார்கள். மேலும், நிரம்பலின் பல்வேறு மூலங் களின் போட்டித் தன்மையை ஆராய்வதற்குப் போதிய நேரம் இருக்கும் போது, மிக மலிவான மூலத்திலிருந்து கொள்வனவு செய்வதற்கும் அவர்கள் தூண்டப்படுவார்கள்.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமும், அதன் விளைவாக இலங்கை ரூபா நிதியிலான அந்நிய செலாவணி விலைகளும் இறக்குமதிக்கான கேள்வியினைக் குறைத்துள்ளதென்று கூறுவதற்குக் காலம் போதாமலிருக் கின்றது. இத்திட்டமானது 1968ன் எட்டு மாதங்களுக்குமட்டும் நடைமுறையிலிருந்ததுடன், கட்டில்லா உத்தரவுச் சீட்டு விடயத்தின்கீழ் வந்த இறக்குமதிகளின் பெறுமதி ஆண்டு முழுவதிலும் இலங்கை வணிகப் பொருள் இறக்குமதிக் கொடுப்பனவுகளில் 13 சதவீதத்துக்கு அதிகரிக்கவு மில்லை. அத்துடன் இப்பெறுமதி, நடைமுறை சந்தை விலைகளில், 1968ல் இலங்கையின் மொத்த உள்நாட்டுச் செலவுகளில் 2.9 சதவீதமாகவே விளங் கிற்று. மேலும், இறக்குமதிகளின் பெறுமதி வெவ்வேறு மாதங்களில் மாற்ற முறுதிருந்ததுடன், அதிகரிப்புப் போக்கினைக் காட்டவுமில்லை.

அட்டவணை *II* (எ) *1*

# இலங்கையின் சென்மதி நிலுவைகள் (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| ஆண்டு | (1) ஏற்றுமதிகள் (மொத்தம்) | (2) இறக்குமதிகள் (மொத்தம்) | (3) வர்த்தக நிலுவை (I) மொத்தம் | (3) வர்த்தக நிலுவை (II) (இதில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள்) (ஆ) | (4) கட்புலனுகாதவை (தேறிய) (பண்டநன்கொடைகளும் உட்பட) | (5) நிலுவை (i) நடைமுறைக் கணக்குகளின் மீது 3 (1) ஐ யும் (4) ஐ யும் தேற்றி | (5) நிலுவை (ii) இதனில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் மீதான நடைமுறைக்கணக்கு நிலுவை | (6) தேறிய நீண்டகால மூலதனம் (இ) | (7) அடிப்படை நிலுவை (5ஐயும் 6ஐயும் தேற்றி) | (8) தேறிய குறுகிய கால மூலதனம் (ஈ) | (9) பிழைகளும் தவறுகளும் | (10) மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றம் (அதிகரிப்பு) + | (11) காலமுடிவில் உள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் | (12) இருப்புச் சொத்துக்கள் (ஸ்டேர்லிங்கடன் ஆழ்நிதிகளைத் தவிர்த்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 ... | 1,669 | 1,764 | — 95 | — 45 | — 100 | — 195 | — 127 | — 18 | — 213 | — 1 | — | —214 | 1,062 | 973 |
| 1958 ... | 1,624 | 1,713 | — 89 | — 11 | — 64 | — 153 | — 119 | + 8 | — 145 | + 32 | — 16 | —129 | 933 | 838 |
| 1959 ... | 1,773 | 1,958 | — 185 | — 49 | — 23 | — 208 | — 66 | + 32 (உ | — 176 | — — | + 1 | —175 (உ | 734 | 665 |
| 1960 ... | 1,796 | 2,006 | — 210 | — 127 | — 10 | — 220 | — 63 | + 22 | — 198 | — 24 | + 29 | —193 | 541 | 458 |
| 1961 ... | 1,707 | 1,794 | — 87 | — 5 | — 7 | — 95 | — 48 | + 11 | — 84 | + 93 (ஊ | — 19 | — 9 | 532 | 441 |
| 1962 ... | 1,763 | 1,906 | — 143 | — 47 | + 3 | — 140 | — 81 | + 39 | — 101 | + 42 (ஊ | + 31 | — 28 | 504 | 407 |
| 1963 ... | 1,708 | 1,869 | — 161 | — 27 | — 7 | — 168 | — 78 | + 80 | — 88 | + 42 | + 4 | — 42 | 462 | 369 |
| 1964 ... | 1,767 | 1,960 | — 193 | — 39 | + 33 | — 160 | — 82 | + 69 (உ | — 92 | + 33 | — 8 | — 51 (உ | 351 | 305 |
| 1965 ... | 1,909 | 1,922 | — 13 | + 128 | + 72 | + 59 | + 136 | + 58 (உ | + 117 | + 3 (ஊ | — 6 | +114 (உ | 440 | 408 |
| 1966 ... | 1,674 | 2,018 | — 344 | — 119 | + 53 | — 290 | — 132 | + 137 | — 153 | + 53 (ஊ | — 22 | — 122 | 318 | 282 |
| 1967 ... | 1,650 | 1,985 | — 335 | — 85 | + 46 | — 289 | — 85 | + 161 | — 128 | +271 (ஊ | — 12 | + 131 | 449 | 407 |
| 1968 (எ) | 1,975 | 2,341 | — 366 | — 29 | + 20 | — 346 | — 51 | + 224 | — 122 | +162 (ஊ | — 26 | + 14 | 463 | 417 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) அந்நிய செலாவணி வரவுகளினதும் செலவுகளினதும் பற்றிய செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக்கொண்டது.

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. (1) வர்த்தக வங்கிகளின் அந்நிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள். (2) வர்த்தக வங்கிகளின் வதிவற்ற கணக்குகள். (3) மத்திய வங்கியின் அந்நிய செலாவணி இயக்கங்கள். (4) கொடுப்பனவு உடன்படிக்கைக் கொடுக்கல்வாங்கல்கள். (5) சிறப்புக் கணக்கு வசதிகளை அனுபவிக்கும் தொழில்நிலையங்களால் நடாத்தப்படும் கொடுக்கல்வாங்கல்கள். அதாவது ஸ்டேர்லிங் பெருந்தோட்டக் கூட்டுநிலையங்களினதும் வர்த்தகர்களினதும் கணக்குகள்.

(இ) தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நீண்ட கால மூலதனத்தின் தேறிய இயக்கங்களை உட்படுத்தும் பற்றுத் தொகைகள் பின்வருமாறு: *1957* ரூபா *230* இலட்சம், *1958* ரூபா *230* இலட்சம், *1959* ரூபா *420* இலட்சம், *1960* ரூபா *270* இலட்சம், *1961* ரூபா *240* இலட்சம், *1962* ரூபா *460* இலட்சம், *1963* ரூபா *820* இலட்சம், *1964* ரூபா *790* இலட்சம், *1965* ரூபா *800* இலட்சம், *1966* ரூபா *1,820* இலட்சம், *1967* ரூபா *2,190* இலட்சம்.

(ஈ) இருப்புடைய வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின்கீழ் உள்ள பொறுப்புக்களின் மாற்றங்களையும், அமெரிக்க பொதுசனச் சட்டம் *480*ன் பயனுக எழுந்த பதில் நிதிகள், வதிவற்றவருக்கான வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள், சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட நிகர தொகைகள் ஆகியனவற்றைக் கொண்டுள்ளது, *1964, 1965, 1966, 1967*ம் ஆண்டுகளுக்கான எண்தொகைகள் அரிசி இறக்குமதியின்பேரில் பர்மாவிற்குக் கொடுக்கவேண்டிய தொகைகளையும் உள்ளடக்கும்.

(உ) *1959*ம் ஆண்டு *240* இலட்சம் ரூபாய்களும், *1964*ம் ஆண்டு *600* இலட்சம் ரூபாய்களும், *1965*ம் ஆண்டு *250* இலட்சம் ரூபாய்களுமான, கிடைக்கப்பெற்ற ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளிலிருந்து கொடுக்கப்பட்ட திருப்பிக் கொடுப்பனவுகளைப் பிரதானமாகக்கொண்ட ஸ்டேர்லிங் கடன் திருப்பிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து.

(ஊ) சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்டவையான *1961*ம் *1962*ம் ஆண்டுகளில் முறையே *538* இலட்சம் ரூபாய்களையும், *1965*ம் ஆண்டில் *1,094* இலட்சம் ரூபாய்களையும், *1966*ம் ஆண்டில் *1,440* இலட்சம் ரூபாய்களையும், *1967*ம் ஆண்டில் *1,226* இலட்சம் ரூபாய்களையும், *1968*ல் *2,132* இலட்சம் ரூபாய்களையும் உள்ளடக்கி; ஆனுல் முன்பு பெற்ற எடுப்பனவுகளின்பேரில் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளாகிய *1965*ன் ரூபா *357* இலட்சம், *1966*ன் ரூபா *536* இலட்சம், *1967*ன் ரூபா *179* இலட்சம், *1968*ன் ரூபா *477* இலட்சம் ஆகியனவும் இலங்கையின் அநுமதிப்பங்கு *1965*ல் $ *450* இலட்சத்திலிருந்து $ *620* இலட்சத்திற்கும், *1966*ம் ஆண்டில் $ *780* இலட்சத்திற்கும் அதிகரித்ததன் பயனுக இலங்கையின் தங்க உதவுத்தொகையாகக் கொடுக்கப்பட்ட *1965*ன் ரூபா *220* இலட்சம் *1966*ன் ரூபா *190* இலட்சம் ஆகியனவும் நீக்கி.

(எ) தற்காலிகமானவை.

# இலங்கைச் சென்மதி நிலுவைகள் (அ)

அமெரிக்க டொலர்கள் பத்து இலட்சம்

| ஆண்டு | (1) ஏற்றுமதிகள் (மொத்தம்) | (2) இறக்குமதிகள் (மொத்தம்) | (3) வர்த்தக நிலுவை (I) (மொத்தம்) | (3) வர்த்தக நிலுவை (II) (இதில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள்)(ஆ | (4) கட்புலனுகாதவை (தேறிய) (பண்டநன்கொடைகளும் உட்பட) | (5) நிலுவை நடைமுறைக்கணக்குகளின் மீது 3 (1) யும்(4)யும் தேற்றி | (5) நிலுவை இதனில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் மீதான நடைமுறை கணக்கு நிலு. | (6) தேறிய நீண்ட கால மூலதனம் (இ) | (7) அடிப்படை நிலுவை (5ஐயும்6ஐயும் தேற்றி) | (8) தேறிய குறுகிய கால மூலதனம் (ஈ) | (9) பிழைகளும் தவறுகளும் | (10) மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில்மாற்றம் (அதிகரிப்பு)+ | (11) காலமுடிவிலுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் | (12) இருப்புச் சொத்துக்கள் (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளைத் தவிர்த்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 ... | 350 | 370 | — 20 | — 9 | — 21 | — 41 | — 27 | — 4 | — 45 | — | — | — 45 | 223 | 204 |
| 1958 ... | 341 | 360 | — 19 | — 2 | — 13 | — 32 | — 25 | + 2 | — 30 | + 6 | — 3 | — 27 | 196 | 176 |
| 1959 ... | 372 | 411 | — 39 | — 10 | — 5 | — 44 | — 14 | + 7 (உ | — 37 | — | — | — 37 (உ | 154 | 138 |
| 1960 ... | 358 | 421 | — 44 | — 27 | — 2 | — 46 | — 13 | + 5 | — 41 | + 5 | + 6 | — 40 | 114 | 96 |
| 1961 ... | 358 | 377 | — 19 | — 1 | — 1 | — 20 | — 10 | + 2 | — 18 | + 20 ஊ | — 4 | — 2 | 112 | 93 |
| 1962 ... | 370 | 400 | — 30 | — 10 | + 1 | — 29 | — 17 | + 8 | — 21 | + 9 ஊ | 6 | — 6 | 106 | 85 |
| 1963 ... | 358 | 392 | — 34 | — 6 | — 1 | — 35 | — 16 | + 17 | — 18 | + 9 | — | 9 | 97 | 75 |
| 1964 ... | 371 | 411 | — 40 | — 8 | + 7 | — 33 | — 17 | + 14 (உ | — 19 | + 7 | — 1 | + 11 (உ | 74 | 64 |
| 1965 ... | 401 | 404 | — 3 | + 27 | + 15 | + 12 | + 29 | + 12 (உ | + 24 | + 1 ஊ | — 1 | — 24 (உ | 92 | 86 |
| 1966 ... | 352 | 424 | — 72 | — 25 | + 11 | — 61 | — 28 | + 29 | — 32 | + 11 ஊ | — 5 | — 26 | 94 | 59 |
| 1967 ... | 347 | 417 | — 70 | — 18 | + 10 | — 60 | — 18 | + 34 | — 26 | + 57 | — 24 | + 28 | — | 85 |
| 1968 ... | 332 (எ) | 393 | — 61 | — 5 | + 3 | — 58 | — 9 | + 38 | — 20 | + 26 | — 4 | + 2 | 78 | 70 |

(அ) அந்நிய செலாவணி வரவுகளினதும் செலவுகளினதும் பற்றிய செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது: (1) வர்த்தக வங்கிகளின் அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள், (2) வர்த்தக வங்கிகளின் வதிவற்ற கணக்குகள், (3) மத்திய வங்கியின் அந்நிய செலாவணி இயக்கங்கள், (4) கொடுப்பனவு உடன்படிக்கைக் கொடுக்கல் வாங்கல்கள், (5) சிறப்புக் கணக்கு வசதிகளை அனுபவிக்கும் தொழில்நிலையங்களால் நடாத்தப்படும் கொடுக்கல் வாங்கல்கள். அதாவது ஸ்டேர்லிங் பெருந்தோட்டக் கூட்டுநிலையங்களினதும் வர்த்தகர்களினதும் கணக்குகள்.

(இ) தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நீண்ட கால மூலதனத்தின் தேறிய இயக்கங்களை உட்படுத்தும் பற்றுத் தொகைகள் பின்வருமாறு: 1957 ரூபா 230 இலட்சம், 1958 ரூபா 230 இலட்சம், 1959 ரூபா 420 இலட்சம், 1960 ரூபா 270 இலட்சம், 1961 ரூபா 240 இலட்சம், 1962 ரூபா 460 இலட்சம், 1963 ரூபா 820 இலட்சம், 1964 ரூபா 790 இலட்சம், 1965 ரூபா 800 இலட்சம், 1966 ரூபா 1,890 இலட்சம், 1967 ரூபா 2,190 இலட்சம், 1968 50.9 டொலர்கள்

(ஈ) இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் உள்ள பொறுப்புகளின் மாற்றங்களையும், அமெரிக்க பொதுசனச் சட்டம் 480ன் பயனுக எழுந்த பதில் நிதிகள், வதிவற்றவருக்கான வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள், சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட நிகர தொகைகள் அகியனவற்றைக் கொண்டுள்ளது. 1964, 1965, 1966,1967 1968ஆம் ஆண்டுகளுக்கான எண்தொகைகள் அரிசி இறக்குமதியின் பேரில் பர்மாவிற்குக் கொடுக்கவேண்டிய தொகைகளையும் உள்ளடக்கும்.

(உ) 1959ம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய்களும், 1964ம் ஆண்டு 126 இலட்சம் ரூபாய்களும், 1965ம் ஆண்டு 53 இலட்சம் ரூபாய்களுமான, கிடைக்கப்பெற்ற ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளிலிருந்து கொடுக்கப்பட்ட திருப்பிக் கொடுப்பனவுகளைப் பிரதானமாகக் கொண்ட ஸ்டேர்லிங் கடன் திருப்பிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து.

(ஊ) சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்டவையான 1961ம் 1962ம் ஆண்டுகளில் முறையே, 113 இலட்சம் ரூபாய்களையும், 1965ம் ஆண்டில் 230 இலட்சம் ரூபாய்களையும், 1966ம் ஆண்டில் 302 இலட்சம் ரூபாய்களையும், 1967ம் ஆண்டில் 257 இலட்சம் ரூபாய்களையும், 1968ம் ஆண்டில் 358 இலட்சம் ரூபாய்களையும் உள்ளடக்கி; ஆனால் முன்பு பெற்ற எடுப்பனவுகளின் பேரில் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளாகிய 1965ன் ரூபா 705 இலட்சம், 1966ன் ரூபா 11, இலட்சம், 1967 ரூபா 38 இலட்சம், 1968ன் 80 இலட்சம் ஆகியனவும், இலங்கையின் அநுமதிப்பங்கு 1965ல் 450 இலட்சத்திலிருந்து 620 இலட்சத்திற்கும்3 1966ம் ஆண்டில் 780 இலட்சத்திற்கும் அதிகரித்ததன் பயனுக இலங்கையின் தங்கவுதவு தொகையாகக் கொடுக்கப்பட்ட 1965ன் ரூபா 420 இலட்சம், 1966 ரூபா 40 இலட்சம் ஆகியனவும் நீக்கி.

(எ) தற்காலிகமானவை.

## அட்டவணை II (எ) 3

### வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்களும்

| விடயங்கள் | ப. இ. ரூபாய்களில் | | | | சதவீதப் பங்குகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 |
| (அ) வளங்கள்: | | | | | | | | |
| 1. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளின் க.ஏ.பெ. .. | 1909 | 1674 | 1650 | 1975 | 81 | 70 | 70 | 70 |
| 2. கட்புலஞகா நடைமுறைவிடயங்கள் | 199 | 204 | 216 | 212 | 8 | 9 | 8 | 8 |
| 3. மூலதன உட்பாய்வு .. | 141 | 226 | 261 | 340 | 6 | 9 | 11 | 12 |
| அதில் | | | | | | | | |
| (அ) கடன்கள்1 .. | 77 | 173 | 212 | 295 | 3 | 7 | 9 | 10 |
| (ஆ) நன்கொடைகள்1 .. | 64 | 51 | 46 | 42 | 3 | 2 | 2 | 2 |
| (இ) தனியார் முதல் .. | — | 2 | 3 | 3 | — | — | — | — |
| 4. குறுகிய காலப் பொறுப்புக்கள் | 109 | 175 | 275 | 284 | 5 | 7 | 11 | 10 |
| அதில் | | | | | | | | |
| (அ) சர்வதேச நாணய நிதியிலிருந்து மொத்த எடுப்பனவுகள் | 109 | 144 | 123 | 213 | 5 | 6 | 5 | 8 |
| (ஆ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவையின் அதிகரிப்பு | — | 31 | 80 | 42 | — | 1 | 3 | 1 |
| (இ) அந்நிய வங்கிகளிலிருந்து பற்றுதல்கள் .. | — | — | 57 | 29 | — | — | 2 | 1 |
| (ஈ) ஏனையவை .. | — | — | 15 | — | — | — | 1 | — |
| 5. வெளிசாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சி(ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதி தவிர்த்து .. | — | 126 | — | — | — | 5 | — | — |
| மொத்தம் .. | 2359 | 2405 | 2402 | 2811 | 100 | 100 | 100 | 100 |
| (ஆ) பயன்பாடுகள்: | | | | | | | | |
| 6. வணிகப் பொருட்கள் இறக்குமதிகள் கொ. கா. க. .. | 1922 | 2018 | 1985 | 2341 | 81 | 84 | 83 | 84 |
| அவற்றில் உதவி .. | 142 | 224 | 258 | 337 | 6 | 11 | 11 | 12 |
| 7. கட்புலஞகா நடைமுறை விடயம் | 199 | 213 | 216 | 234 | 9 | 9 | 9 | 8 |
| (அ) முதலீட்ட வருமானம் .. | 4 | 26 | 32 | 34 | — | 1 | 1 | 1 |
| (ஆ) குடியகல்வோர் மாற்றல்கள் | 31 | 32 | 31 | 27 | 1 | 1 | 1 | 1 |
| (இ) வட்டிக் கொடுப்பனவுகள் .. | 22 | 21 | 33 | 40 | — | 1 | 1 | 1 |
| 8. மூலதனக் கடன் குறைப்பு அல்லது மீட்பு | 75 | 114 | 73 | 117 | 3 | 4 | 3 | 4 |
| (அ) தனியார் .. | 3 | 8 | 10 | 10 | — | — | — | — |
| (ஆ) அரசகருமம் .. | 16 | 30 | 45 | 59 | — | 1 | 2 | 2 |
| (இ) சர்வதேச நாணய நிதியில் மீளக் கொள்வனவுகளும்தங்க உதவுதொகைள் | 56 | 76 | 18 | 48 | 2 | 3 | 1 | 2 |
| 9. குறுகிய காலப் பொறுப்புக்கள்3 | 69 | 62 | — | 78 | 3 | 3 | — | 3 |
| 10. வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களின் அதிகரிப்பு (தேறிய ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகள்) .. | 103 | — | 125 | 10 | 4 | — | 5 | — |
| 11. நேராக்கல் விடயம் .. | —9 | —2 | +3 | +31 | — | — | — | —1 |
| மொத்தம் .. | 2359 | 2405 | 2402 | 2811 | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. திட்டவுதவி, பண்டவுதவி, ஆகியவற்றிலிருந்து பெற்ற உதவிகளை உள்ளடக்கும்.
2. இலங்கையின் அநுமதிப் பங்கு 620 இலட்சத்திலிருந்து 1966ல் 780 இலட்சத்திற்கு அதிகரித்ததின் பேரில் ஏற்பட்ட தங்கக் கட்டண உதவுதொகையின் கொடுப்பனவிற்கென சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற 1966ம் ஆண்டிற்கான ரூபா 190 இலட்சமும் கொண்ட விசேட எடுப்பனவுகளை உள்ளடக்கும்.
3. குறுகிய காலப் பொறுப்புக்கள் இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகளின் மாற்றத்தையும் விசேட கணக்கு வசதிகளை அனுபவிக்கும் தொழில்நிலைய நிலுவைகளின் மாற்றத்தையும், அரசாங்க உணவு இறக்குமதிகள்மீதான காலந்தாழ்த்திய கொடுப்பனவையும் உள்ளடக்கும்.

## அட்டவணை *II* (எ) 4

### நடைமுறைக் கட்புலஞகாக் கணக்கு *1967, 1968.*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1967 | | | 1968 (தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | வரவு | பற்று | வரவு | நிகர |
| சேவைகள் | **209.9** | **185.6** | **+ 24.3** | **203.8** | **206.5** | **— 2.7** |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (தேறிய) | — | 1.7 | — 1.7 | — | 2.6 | — 2.6 |
| போக்குவரத்து | 129.8 | 15.0 | +114.8 | 117.1 | 15.4 | +101.7 |
| பிரயாணம் .. | 5.9 | 16.8 | — 10.9 | 10.3 | 20.0 | — 9.7 |
| முதலீட்டு வருமானம் | 11.1 | 64.6 | — 53.5 | 13.5 | 74.0 | — 60.5 |
| நேரடி முதலீடு .. | 0.7 | 32.1 | — 31.4 | 1.5 | 34.0 | — 32.5 |
| ஏனைய .. | 10.4 | 32.5 | — 22.1 | 12.0 | 40.0 | — 28.0 |
| அரசாங்கச் செலவு .. | 24.1 | 12.0 | + 12.1 | 24.0 | 16.0 | + 8.0 |
| ஏனைய சேவைகள் .. | 39.0 | 75.5 | — 36.5 | 38.9 | 78.5 | — 39.6 |
| மாற்றல் கொடுப்பனவுகள்: | **52.5** | **30.7** | **+ 21.8** | **50.1** | **27.1** | **— 23.0** |
| தனியார் மாற்றல்கள் | 6.6 | 30.7 | — 24.1 | 7.7 | 27.1 | — 19.4 |
| அரசகரும மாற்றல்கள் | 45.9 | — | + 45.9 | 42.4 | — | + 42.4 |
| மொத்தம் | 262.4 | 216.3 | + 46.1 | 253.9 | 233.6 | + 20.3 |

அட்டவணை *II* (எ) 5

உதவி வருவாய்களின் அதிகரிப்பு 1967—1968

| ரூபாய்களில் | பண்ட உதவி | | | | | | திட்ட உதவி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ப. இ. | | | ப.இ.ஐ.அ. டொலர்கள் | | | ப. இ. ரூபாய்களில் | | | பத்து இலட்சம் ஐ.அ.டொலர். | | |
| | 1967 | 1968 | மாற்றம் | 1967 | 1968 | மாற்றம் | 1967 | 1968 | மாற்றம் | 1967 | 1968 | மாற்றம் |
| 1. நுகர்ச்சிப் பொருட்கள்* | | | | | | | | | | | | |
| கோதுமை மா .. | 23.5 | 114.4 | +90.9 | 4.94 | 19.22 | +14.28 | — | — | — | — | — | — |
| பண்ணை உற்பத்திகள் | — | 0.4 | + 0.4 | — | 0.07 | + 0.07 | — | — | — | — | — | — |
| மீன், மீன் தயாரிப்புக்கள் | 4.4 | — | — 4.4 | 0.92 | — | — 0.92 | — | — | — | — | — | — |
| ஏனைய உணவு .. | — | 3.0 | + 3.0 | — | 0.50 | + 0.50 | — | — | — | — | — | — |
| மருந்துகள் .. | 1.0 | 0.6 | — 0.4 | 0.21 | 0.10 | — 0.11 | — | — | — | — | — | — |
| ஆடைகள் .. | 15.4 | — | —15.4 | 3.23 | — | — 3.23 | — | — | — | | — | — |
| ரயர்களும் ரியூப்புகளும் | 14.3 | 5.3 | — 9.0 | 3.00 | 0.89 | — 2.11 | — | — | — | — | — | — |
| | 58.6 | 123.7 | +65.1 | 12.30 | 20.78 | + 8.48 | — | — | — | — | — | — |
| 2. நடுத்தரப் பொருட்கள் | | | | | | | | | | | | |
| உரம் .. | 43.0 | 62.3 | +19.3 | 9.03 | 10.47 | + 1.44 | — | — | — | — | — | — |
| விதை உருளைக் கிழங்கு | — | 0.5 | + 0.5 | — | 0.08 | + 0.08 | — | — | — | — | — | — |
| தாள், தாள்மட்டை | 0.9 | 0.4 | — 0.5 | 0.19 | 0.07 | — 0.12 | — | — | — | — | — | — |
| பொறியியற் களஞ்சியம் | 4.5 | 2.2 | — 2.3 | 0.94 | 0.37 | — 0.57 | — | — | — | — | — | — |
| கைத்தொழிற் பொருட்கள் | 20.9 | 12.6 | — 8.3 | 4.39 | 2.12 | — 2.27 | — | — | — | — | — | — |
| | 69.3 | 78.0 | + 8.7 | 14.55 | 13.11 | — 1.44 | — | — | — | — | — | — |
| 3. முதலீட்டப் பொருட்கள் | | | | | | | | | | | | |
| பொறி .. | 37.5 | 30.7 | — 6.8 | 7.87 | 5.16 | — 2.71 | 33.5 | 40.2 | +6.7 | 7.03 | 6.75 | —0.28 |
| ராக்டர்களும் பாசல்களும் | 15.5 | 6.3 | — 9.2 | 3.26 | 1.06 | — 2.20 | — | — | — | — | — | — |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 14.7 | 29.8 | +15.1 | 3.09 | 5.00 | + 1.91 | — | — | — | — | — | — |
| கட்டடப் பொருட்கள் | 6.2 | 3.9 | — 2.3 | 1.30 | 0.66 | — 0.64 | — | — | — | — | — | — |
| | — | 0.4 | + 0.4 | — | 0.07 | + 0.07 | — | — | — | — | — | — |
| மொத்தம் | 73.9 | 71.8 | — 2.8 | 15.52 | 11.95 | — 3.57 | 33.5 | 40.2 | +6.7 | 7.03 | 6.75 | —0.28 |
| | 201.8 | 272.4 | + 70.6 | 42.37 | 45.84 | + 3.47 | 33.5 | 40.2 | +6.7 | 7.03 | 6.75 | —0.28 |

மூலம்: அமைப்புத் திட்டப் பொருளாதார அமைச்சு; இலங்கை மத்திய வங்கி பொதுப்படுகடன் திணைக்களம்;

* ஐக்கிய அமெரிக்க பொ. ச. 480 உடன்படிக்கையின்கீழ்ப் பெறப்பட்ட ரூபா 45 இலட்சம்கொண்ட மா, ரூபா 14 இலட்சம் சோளம் ஆகிய இறக்குமதிகளைத் தவிர்க்கும்.

## அட்டவணை II (எ) 6

## இலங்கையினது மொத்த அலுவலக வெளிநாட்டுப் பொறுப்புக்கள்

பத்துழ இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | (1) தொகை 1967 முதலில் | (2) தொகை 1968 முடிவில் | (3) மாற்றம் |
|---|---|---|---|
| 1. ச.நா.நி. கடன் எடுப்புக்கள் | 376.1 | 541.6 | +165.5 |
| 2. ஸ்டேர்லிங் கடன்கள் .. | 89.3 | 89.3 | ... |
| 3. எடுப்பனவு செய்யப்பட்டு வெளிநின்ற ஏனைய அந்நிய கடன்கள் .. | 517.8 | 533.7 | + 15.9 |
| 4. நல்லுறவு கூட்டுதவி(கொன்சோர்டியம்) | 333.5 | 606.3 | +272.8 |
| 5. உணவு ஆணையாளர் பின்போடப்பட்ட பொறுப்புக்கள் .. | 53.7 | 39.7 | — 14.0 |
| 6. கொடுப்பனவு ஒப்பந்தங்களின்கீழ் இலங்கை கொடுக்கவேண்டிய .. | 110.4 | 197.8 | + 87.4 |
| 7. அந்நிய வங்கிகளிற் கடன்பாடு | 57.1 | 28.6 | — 28.5 |
| மொத்தம் | 1537.9 | 2037.0 | +499.1 |

* அந்நிய செலாவணி கொடுக்கப்பட வேண்டிய பொறுப்புக்கள் இணைக்கிணை நிதிகள் பொ.ச. 480 இனது நிலுவைகளையும் வர்த்தக வங்கிகளுடனன வதிவற்ற நிலுவைகளையும் தவிர்க்கும்.

(1) இவ்வாண்டில் உள்ள ப.நா.நி. ரூபாய் 2,132 இலட்சம் கொண்ட கடன்பாடுகளையும், ரூபா 477 இலட்சம் கொண்ட மீளக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும். இலங்கை ரூபாய்களிற் கொடுக்கப்பட்ட சேவைக்கட்டணங்களைத் தவிர்க்கும்.

(2) (2)உம் (3)உம் 1968ம் ஆண்டிற்கான எண்தொகைகள் 1967 நவெம்பர் இலங்கை ரூபாய் மதிப்பிறக்கத்தின் விளைவால் ஏற்பட்ட பொறுப்புக்களில் உள்ளடக்குவதற்குச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

(4) ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சேர்மன் இணைப்புக் குடியரசு, யப்பான், இந்தியா, கனடா, பிரான்சு என்பவற்றிலிருந்து முதலாம், இரண்டாம், மூன்றும், நாலாம் பண்ட உதவித் திட்டங்களின்கீழ் பெறப்பட்ட பண்ட உதவியை உள்ளடக்கும்.

(5) இறக்குமதிக்கு தாமதித்துச் செய்து கொடுப்பனவுகள் நியதியில் உணவு ஆணையாளரின் பொறுப்புக்கள் உள்ளடக்கும். (1) பர்மாவில் இருந்து அரிசி, (2) அவுஸ்திரேலியாவிலிருந்தும், பிரான்சிலிருந்தும் மா.

(6) 1968 இறுதியில் நிலுவையின் மொத்தம் அவ்வாண்டிற் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பாகச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன. 1967ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தின்கீழ் சீனுவிற்குச் சம்பல் ஏற்றப்பட்ட இரப்பருக்கான விலைச் சீராக்கத்தினுலேற்பட்ட பொறுப்புக்களின் அதிகரிப்பு 1968ம் ஆண்டின் நிலுவைகளில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.

## அட்டவணை *II* (எ) 7

## இலங்கையின் சிறிய ஏற்றுமதிகளின் பெறுமதி 1967—1968

பெறுமதி அமெரிக்க டொலர்களில் '000

| விடயம் | அளவு '000 | அதிகரிப்பு | | | வீழ்ச்சி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1967 | 1968 | % மாற்றம் | 1967 | 1968 | % மாற்றம் |
| *I.* முதன்மைப் பொருட்கள்: | | | | | | | |
| பாக்கு .. | ... அந்தர் | | | | 5.5 | 5.1 | —7 |
| வெற்றிலைகள் .. | ... ,, | | | | 1.4 | 1.3 | —7 |
| ஏலக்காய் .. | ... ,, | 2.4 | 2.5 | 4 | | | |
| தேங்காய்ச் சிரட்டைக் கரி | ... ,, | 273.0 | 319.0 | 17 | | | |
| கறுவாச் சுள்ளிகள் .. | ,, | 7.9 | 16.6 | 110 | | | |
| கறுவாச் சுருள்கள் | ... ,, | 52.8 | 61.8 | 17 | | | |
| கறுவாப்பட்டை எண்ணெய் | ... இரு. | | | | 1.5 | 1.4 | —7 |
| கறுவாயிலை எண்ணெய் | ... ,, | 43.5 | 79.2 | 82 | | | |
| சிற்றனில்லா எண்ணெய் | ... ,, | | | | 337.7 | 297.8 | —12 |
| கராம்பு .. | ... அந்தர் | .85 | .95 | 12 | | | |
| கொக்கோ .. | .. ,, | 23.2 | 34.8 | 50 | | | |
| சலிர்ப்புத் தும்பு நார் | ... ,, | 538.0 | 563.9 | 5 | | | |
| மெத்தைத் தும்பு நார் | ... ,, | 1065.0 | 1260.3 | 18 | | | |
| தும்புக் கயிறு .. | ... ,, | | | | 7.0 | 5.7 | —19 |
| விறைக்கச்செய்தோ குளிரூட்டியோயுள்ள மீன் | ... ,, | | 309.5 | | | | |
| புகையிடப்பட்ட அல்லது உலர்ந்த மீன் | ... ,, | | | | 3.7 | 1.5 | —59 |
| இல்மனைட் .. | ... ,, | | | | 1764.4 | 1455.0 | —18 |
| இலவம் பஞ்சு .. | ... ,, | 4.3 | 7.1 | 65 | | | |
| தோல் (ஆடு) .. | ... ,, | 2.5 | 3.3 | 32 | | | |
| பதனிடப்பட்ட தோல் | ... ,, | 7.7 | 10.1 | 31 | | | |
| காக்காப் பொன் (மைக்கா) | ... ,, | 2.1 | 2.6 | 24 | | | |
| சாதிக்காய் .. | ... ,, | .76 | 2.1 | 176 | | | |
| பப்பேயின் (வெள்ளை) | ... ,, | | | | .18 | .13 | —28 |
| பப்பேயின் (மண்ணிறம்) | ... ,, | .19 | 2.6 | 36 | | | |
| மிளகு .. | ... ,, | 2.0 | 16.2 | 710 | | | |
| காரீயம் .. | ... ,, | 204.1 | 212.6 | 4 | | | |
| அருங்கற்கள் அருங்கற்கள் சார்புடையனவும் | ... கரட் | 24.9 | 196.0 | 687 | | | |
| சுறு மீன் துடுப்பு | ...அந்தர் | | | | 1.6 | 1.1 | —31 |
| புகையிலை தயாரிக்கப்படாதது | ... இரு. | 942.2 | 1340.2 | 42 | | | |
| மரக்கறி வடிமங்கள் | ...அந்தர் | | | | 25.8 | 7.6 | —71 |
| *II.* தயாரிக்கப்பட்ட பொருட்கள்: | | | | | | | |
| அலுமினியப் பொருட்கள் | ... அந்தர் | .17 | .92 | 441 | | | |
| இரும்பு உருக்குப் பொருட்கள் | ... ,, | | | | 3.5 | 2.3 | —34 |
| பாண்சாலை உற்பத்திகள் | ... ,, | .25 | .26 | 4 | | | |
| இரப்பர், மதிப்பிடப்பட்டவை | ... டசின் | 4.8 | 10.4 | 117 | | | |
| சொக்கிலேற்றும் கொக்கோ உற்பத்திகளும் | ... இரு. | .49 | 4.6 | 839 | | | |
| ஆடைகள் .. | ... டசின் | 3.7 | 32.3 | 773 | | | |
| பருத்தியாற் செய்யப்பட் பொருட்கள் .. | ... ,, | 10.9 | 25.0 | 129 | | | |
| போத்தலிலிடப்பட்ட அல்லது கலனிடப்பட்ட பழம் | ... அந்தர் | .8 | 4.5 | 463 | | | |
| கிளிசறின் .. | ... | — | 20.9 | — | | | |
| கிளிசறேல் .. | ... | 21.8 | 24.8 | 13 | | | |
| நகைகளும் பொற்கொல்லர்கள் | | | | | | | |
| ஈயத் தூள்கள் துருத்திகள் | | | | | | | |
| மரத்தினுற் தயாரிக்கப்பட்ட பொருட்கள் .. | ... அந்தர் | 10.7 | 15.4 | 44 | | | |
| சவர்க்காரம் .. | | | | | | | |
| சிதறற் தடைக்காப்புடைய | ... | .58 | .74 | 28 | | | |
| மின்மே கலன்கள் | | 1.3 | 1.5 | 15 | | | |
| தேயிலை சலர்த்தும் பொறிகள் | ... | .03 | .03 | — | | | |
| திரிவேஉ .. | | .13 | .78 | 500 | | | |

— மாற்றமில்லை

மூலம் : இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்,

## அட்டவணை (எ) 8

## இலங்கையின் சிறிய ஏற்றுமதிகளின் அளவு—1967, 1968

அமெரிக்க டொலர்களில் '000

| விடயம் | அதிகரிப்பு | | | வீழ்ச்சி | | |
|---|---|---|---|---|---|---|
| | 1967 | 1968 | % மாற்றம் | 1967 | 1968 | % மாற்றம் |
| **I. முதன்மைப் பொருட்கள்:** | | | | | | |
| பாக்கு | 30.8 | 41.2 | 34 | | | |
| வெற்றிலைகள் | | | | 30.3 | 22.4 | —26 |
| ஏலக்காய் | 688.3 | 690.9 | 0.38 | | | |
| தேங்காய்ச் சிரட்டைக்கரி | | | | 1033.1 | 875.9 | —15 |
| கறுவாச் சுள்ளிகள் | 255.3 | 394.2 | 54 | | | |
| கறுவாச் சுருள்கள் | | | | 6260.4 | 5522.3 | —31 |
| கறுவாப்பட்டை எண்ணெய் | | | | 91.8 | 63.5 | —31 |
| கறுவாயிலை எண்ணெய் | 94.5 | 139.7 | 48 | | | |
| சிற்றனில்லா எண்ணெய் | 173.1 | 199.5 | 15 | | | |
| கராம்பு | 18.7 | 20.8 | 11 | | | |
| கொக்கோ | 870.1 | 1233.0 | 42 | | | |
| சிலிர்ப்புத் தும்பு நார் | | | | 4626.1 | 4296.0 | —7 |
| மெத்தைத் தும்பு நார் | 4079.9 | 4283.3 | 5 | | | |
| தும்புக் கயிறு | | | | 99.9 | 73.8 | —26 |
| விறைக்கச் செய்த குளிரூட்டிய மீன் | — | 76.5 | | | | |
| புகைபிடிக்கப்பட்ட அல்லது உலர்ந்த மீன் | | | | 87.9 | 61.5 | —30 |
| இல்மனைட் | 319.9 | 434.6 | 36 | | | |
| இலவம் பஞ்சு | 62.2 | 92.2 | 48 | | | |
| தோல் (ஆடு) | 179.1 | 187.3 | 5 | | | |
| பதனிடப்பட்ட தோல் | | | | 327.3 | 306.3 | —6 |
| காக்காப் பொன் (மைக்கா) | 5.4 | 7.3 | 35 | | | |
| சாதிக்காய் | 29.8 | 61.4 | 106 | | | |
| பப்பேயின் (வெள்ளை) | 48.1 | 50.7 | 5 | | | |
| பப்பேயின் (மண்நிறம்) | 40.4 | 54.7 | 35 | | | |
| மிளகு | 92.2 | 398.1 | 332 | | | |
| காரீயம் | | | | 1406.9 | 1318.5 | —6 |
| அருங்கற்கள் அருங்கற்கள்சார்புடையவை | | | | 728.9 | 340.8 | —53 |
| சுறுமீன் துடுப்பு | | | | 127.9 | 80.2 | —37 |
| புகையிலை தயாரிக்கப்பட்டது | 593.1 | 857.1 | 45 | | | |
| மாரக்கறி வடிமங்கள் | | | | 96.4 | 24.3 | —75 |
| **II. தயாரிக்கப்பட்ட பொருட்கள்:** | | | | | | |
| அலுமீனியப் பொருட்கள் | 13.3 | 22.4 | 68 | | | |
| இரும்பு உருக்குப் பொருட்கள் | 13.6 | 72.9 | 436 | | | |
| பாண்சாலை உற்பத்திகள் | | | | 6.1 | 2.9 | —52 |
| சப்பாத்துக்கள், இரப்பர் மிதியிடப்பட்ட | 20.3 | 50.5 | 149 | | | |
| சொக்லேற்றும் கொக்கோ உற்பத்திகளும் | 12.6 | 22.8 | 81 | | | |
| ஆடைகள் | .88 | 700.9 | 79548 | | | |
| பருத்தியாற் செய்யப்பட்ட பொருட்கள் | | | | 226.2 | 106.5 | —53 |
| போத்தலிலிடபட்ட/கலனிடப்பட்ட பழம் | 11.8 | 45.8 | 288 | | | |
| கிளிசறின் | — | 328.4 | | | | |
| கிளிசறேல் | | | | 410.8 | 327.5 | —20 |
| நகைகளும் பொற்கொல்லர்களும் | | | | 490.8 | 198.5 | —60 |
| ஈயத் தூள்கள் துருத்திகள் | | | | 121.1 | 113.5 | —6 |
| மரத்தினுற் தயாரிக்கப்பட்ட பொருட்கள் | 47.5 | 51.5 | 8 | | | |
| சவர்க்காரம் | | | | 21.2 | 19.8 | —98 |
| தேயிலை உலர்த்தும் பொறிகள் | 31.5 | 90.3 | 187 | | | |
| திரிவேலை | 7.5 | 36.0 | 481 | | | |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

## அட்டவணை II (எ) 9

## அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட இறக்குமதிக் கொடுப்பனவுகள்

### (ஆ) விடய அநுமதிப் பங்கும் கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளும் (1968, மே — டிசெம்பர்)

| விடயங்கள் | பத்து இலட்சம் ரூபாய்கள் | தொகுதி மொத்தத்திற் சதவீதப்பங்கு | கூட்டுமொத்தத்தில் தொகுதி மொத்தத்தின் சதவீதப் பங்கு |
|---|---|---|---|
| 0. உணவு | **14.6** | **100.0** | **7.9** |
| பாற் பண்ணைப் பொருட்கள் முட்டைகள் | 4.2 | 28.9 | |
| வெண்ணெய், சீஸ் | 2.5 | 17.4 | |
| தானியங்கள் | 3.7 | 25.1 | |
| ஏனையவை | 4.2 | 28.6 | |
| 1. பானங்களும் புகையிலையும் | **1.5** | **100.0** | **0.8** |
| மதுபானங்கள் | 0.7 | 49.0 | |
| தயாரிக்கப்படாத புகையிலை | 0.8 | 51.0 | |
| 2. எரிபொருள் தவிர்ந்த செப்பமுறாத மூலப் பொருட்கள் | **9.0** | **100.0** | **4.9** |
| பருத்தி | 2.8 | 30.8 | |
| செப்பமுறாத தாவரப் பொருட்கள் | 4.1 | 45.9 | |
| ஏனையவை | 2.1 | 23.3 | |
| 3. கனிப்பொருட்களும் எரிபொருட்களும் உராய்வு நீக்கிகளும் | **1.33** | **100.0** | **0.7** |
| பெற்றோலியப் பொருட்கள் | 1.28 | 96.5 | |
| ஏனைய கனிப்பொருள் எரிபொருள் உராய்து நீக்கிகள் | 0.05 | 3.5 | |
| 4. மிருக, தாவர எண்ணெய்களும் கொழுப்புகளும் | **1.67** | **100.00** | **0.9** |
| மிருக எண்ணெய்களும் கொழுப்புகளும் | 1.51 | 90.7 | |
| ஏனைய நிலையான தாவர எண்ணெய்கள் | .11 | 6.3 | |
| ஏனையவை | .05 | 3.0 | |
| 5. இரசாயனங்கள் | **20.7** | **100.00** | **11.2** |
| சேதன இரசாயனங்கள் | 5.4 | 26.2 | |
| அசேதன இரசாயனங்கள், ஒட்சைட், உப்புகள் | 3.2 | 15.6 | |
| இரசாயன மூலப்பொருட்களும் உற்பத்திகளும் | 2.9 | 14.2 | |
| ஏனையவை | 9.2 | 44.0 | |
| 6. தயாரிக்கப்பட்ட பொருட்கள் | **77.2** | **100.0** | **41.8** |
| காகித காகிதமட்டை | 14.1 | 18.2 | |
| நூலும் முறுக்கு நூலும் | 11.3 | 14.6 | |
| இரப்பர் பொருட்கள் | 5.6 | 7.3 | |
| கத்தி முட்களும், உலோகத்தின் தயாரிப்புகளும் | 8.6 | 11.0 | |
| ஏனையவை | 37.6 | 48.9 | |
| 7. இயந்திர போக்குவரத்துச் சாதனம் | **48.0** | **100.0** | **25.9** |
| மோட்டார் வாகனங்களும் ஏனைய வாகனங்களும் | 18.1 | 37.8 | |
| விவசாய உறுப்புக்களும், கருவிகளும் | 6.8 | 14.1 | |
| இயந்திரமும் கருவிகளும் | 6.2 | 12.8 | |
| ஏனையவை | 1.69 | 35.3 | |
| 8. தயாரிக்கப்பட்ட பல்வகையான பொருட்கள் | **10.9** | **100.0** | **5.9** |
| புகைப்பட திரைப்படச் சாதனங்கள் | 2.3 | 21.6 | |
| உடைகள் (கம்பளி உடை தவிர்த்து) | 2.0 | 18.3 | |
| அச்சடிக்கப்பட்ட பொருட்கள் | 1.4 | 13.1 | |
| விஞ்ஞான உபகரணங்கள் | 1.1 | 9.9 | |
| அலுவலக எழுதுகருவிப் பொருட்கள் | 1.0 | 8.8 | |
| தள்ளுவண்டிகள், விளையாட்டுப் பொருட்கள், | 0.9 | 8.3 | |
| ஏனையவை | 2.2 | 20.0 | |
| கூட்டு மொத்தம் | **184.9** | | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### பொருளாதார விடயங்களின்படியான பகுப்பாய்வு 1968 மே-டிசெம்பர்

| | பெறுமதி ப.இ. ரூபாய்களில் | சதவீதப் பங்கு |
|---|---|---|
| நுகர்ச்சிப் பொருட்கள் | *42.4* | *22.9* |
| நடுத்தரப் பொருட்கள் | *94.5* | *51.1* |
| முதலீட்டுப் பொருட்கள் | *48.0* | *26.0* |
| மொத்தம் | *184.9* | *100.0* |

## அட்டவணை II (எ) 10

## கட்டில்லாப் பொது உத்தரவுச்சீட்டு இறக்குமதிகளின்பேரில் திறக்கப்பட்ட நாணயக் கடன்களின் பெறுமதி 1968 மே—திசெம்பர்

ஆயிரம் ரூபாய்களில்

| தொகுதி பண்டம் | மே | | யூன் | | யூலை | | ஓகத்து | | செத்தெம்பர் | | ஒற்ரோபர் | | நவெம்பர் | | திசெம்பர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % | பெறுமதி | % |
| 1. உணவு புகையிலையுங் குளிர்பானமும் | 473.6 | 7.8 | 2,309.5 | 6.5 | 1,801.5 | 3.7 | 1,633.3 | 2.4 | 1,016.2 | 2.9 | 1,761.1 | 4.1 | 668.4 | 2.2 | 432.0 | 1.1 | 10,095.6 | 3.3 |
| 2. செப்பமுறுத பொருட்களும் எரிபொருள் தவிர்ந்த உணவற்றையும் .. | 194.8 | 3.2 | 1,422.8 | 4.0 | 2,211.9 | 4.5 | 837.2 | 1.2 | 1,634.2 | 4.7 | 2,278.2 | 5.4 | 666.6 | 2.2 | 2,006.1 | 5.0 | 11,251.8 | 3.7 |
| 3. கனிப்பொருள் எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் தொடர்பான பொருட்களும் .. | — | — | — | — | 217.2 | 0.4 | 738.3 | 1.1 | 64.7 | 0.2 | 63.4 | 0.1 | 62.7 | 0.2 | 177.1 | 0.4 | 1,323.4 | 0.4 |
| 4. மிருக மரக்கறி எண்ணெய்களும் கொழுப்புகளும் | — | — | 480.5 | 1.4 | 412.5 | 0.8 | 2,339.3 | 3.5 | 3,196.8 | 9.3 | 3,649.9 | 8.6 | 2,840.1 | 9.2 | 2,431.0 | 6.1 | 15,350.1 | 5.0 |
| 5. இரசாயனங்கள் .. | 322.4 | 5.3 | 4,294.1 | 12.1 | 7,250.9 | 14.8 | 1,510.4 | 2.2 | 1,749.2 | 5.1 | 1,827.6 | 4.3 | 2,047.2 | 6.6 | 1,718.2 | 4.3 | 20,720.0 | 6.8 |
| 6. மூலப் பொருட்களின்படி பகுக்கப்பட்ட தயாரிக்கப்பட்ட பொருட்கள் .. | 3,063.3 | 50.5 | 17,476.4 | 49.4 | 20,934.6 | 42.7 | 48,932.7 | 72.5 | 15,020.0 | 43.5 | 19,352.2 | 45.5 | 13,208.4 | 42.6 | 17,545.4 | 43.8 | 155,533.0 | 50.8 |
| 7. இயந்திரமும்போக்குவரத்துச் சாதனமும் .. | 1,522.9 | 25.1 | 6,160.9 | 17.4 | 13,632.0 | 27.8 | 9,501.4 | 14.1 | 9,402.0 | 27.2 | 9,762.0 | 23.0 | 8,321.6 | 26.9 | 13,303.0 | 33.2 | 71,605.8 | 23.4 |
| 8. தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருட்கள் .. | 485.8 | 8.0 | 33,264.5 | 9.2 | 2,621.4 | 5.3 | 1,987.3 | 2.9 | 2,455.6 | 7.1 | 3,839.6 | 9.0 | 3,154.3 | 10,2 | 2,471.6 | 6.2 | 20,280.1 | 6.6 |
| 9. அட்டவணைப்படுத்தப்பட்ட மொத்தம் .. | 6,062.8 | 100.0 | 35,408.7 | 100.0 | 49,082.0 | 100.0 | 67,479.9 | 100.0 | 34,538.7 | 100.0 | 42,534.0 | 100.0 | 30,969.3 | 100.0 | 40,084.4 | 100.0 | 306,159.8 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (எ) 11

### 1968இல் வந்தடைந்த உதவிகளின் விவரம்— பிரதேசப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| நாடு | பொருளாதார உதவி† | திட்டவுதவி | மொத்தம் |
|---|---|---|---|
| ஐக்கிய இராச்சியம் .. .. | 55.9 | 0.9 | 56.8 |
| பிரான்சு .. .. | 13.9 | | 13.9 |
| சேர்மன் சமஷ்டிக் குடியரசு .. | 25.4 | 7.1 | 32.5 |
| சேர்மன் சனநாயகக் குடியரசு .. | | 19.6 | 19.6 |
| போலாந்து .. .. | | 2.1 | 2.1 |
| யூகோசிலேவியா .. .. | | 1.2 | 1.2 |
| ஐ.ச.சோ.கு. .. .. | | 1.4 | 1.4 |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் .. | 122.9 | 0.1 | 123.0 |
| கனடா .. .. | 13.0 | 7.8 | 20.8 |
| இந்தியா .. .. | 6.4 | | 6.4 |
| யப்பான் .. .. | 28.8 | | 28.8 |
| அவுஸ்திரேலியா .. .. | 6.5 | | 6.5 |
| மொத்தம் | 272.8 | 40.2 | 313.0 |

மூலம்: அமைப்புத் திட்ட பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

† பண்டவுதவிக்குக்கீழ் காட்டப்பட்டுள்ள 2,728 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்தத்தில், ஐ.நா. வின் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் வந்தடைந்த 220 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கனடிய கோதுமை மாவும், 30 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஏனைய பொருட்களும் தவிர்க்கப்பட்டுள்ளன.

## இலங்கை மத்திய வங்கி — விளம்பரம்

### அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்

1968 மே 6ஆந் தேதி முதல் ஒரு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதென இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், ஏற்றுமதி செய்யப்பட்ட சில பொருட்களுக்கும், சேவைகளுக்கும், கீழ்வரும் 3ஆம் பந்தியிற் குறிப்பிட்டுள்ள சில உள்வந்த பணவனுப்பல்களுக்கும் எதிராகப் பெறும் அந்நிய செலாவணிகளை வர்த்தக வங்கிகளில் ஒப்படைப்போருக்கு, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் (இதன்பின் சான்றிதழ்கள் எனக் கூறப்படுவன) வழங்கப்படும். அத்துடன் சான்றிதழ்களின் விற்பனைக்காக கிழமைதோறும் இலங்கை மத்திய வங்கி கேள்விகளை நடாத்தும். சான்றிதழ்களின் உடைமையாளர்கள் சிலவகை இறக்குமதிப் பொருட்களுக்கும் ஏனைய பணவனுப்பல்களுக்குமாக, வர்த்தக வங்கிகளிடமிருந்து, அந்நிய செலாவணி விற்பனை வீதங்களின்படியும் அவ்வந்நிய செலாவணிகளுக்கு ஈடான முகமதிப்புப் பெறுமானமுடைய சான்றிதழ்களை ஒப்படைப்பதன் மூலமும், அந்நிய செலாவணிகளைக் கொள்வனவு செய்வதற்கு (இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகள், செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகளுக்கமைய) உரிமை பெறுவர்.

2. இலங்கை அரசாங்கத்தின் முகவர் என்ற பெயரில், இலங்கை மத்திய வங்கி, இவ்வுரிமைச் சான்றிதழ்களை வெளியிடுவதற்குப் பொறுப்புடையதாயிருக்கும். இச் சான்றிதழ்கள் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளரின் கையொப்பத்தை அச்சில் கொண்டு விளங்கும். மத்திய வங்கி தனது பேரில் கொழும்பிலுள்ள வர்த்தக வங்கிகள் இச்சான்றிதழ்களை வழங்குவதற்கு அதிகாரமளித்துள்ளது. இவை வழங்கப்படும் பொழுது, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளரின் அச்சிடப்பட்ட கையொப்பத்துடன், வழங்கும் வங்கியின் சார்பில் இரு கையொப்பங்களைக் கொண்டிருக்கும். வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள், இச்சான்றிதழ்கள் கட்டுவரையின்றி மற்றையோர்க்கு பரிமாறற்குகந்தன; இவை அக் காலவரைக்குள் வர்த்தக வங்கிகளிடம் கையளிக்கப்படவேண்டியவையாகும். இச்சான்றிதழுக்கு எதிரான சகல அந்நிய செலாவணிக் கொள்வனவுகளும் கையளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதத்திற்குள் நிறைவேற்றி முடியவேண்டும். அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள், ரூபா 50,000, ரூபா 10,000, ரூபா 5,000, ரூபா 1,000, ரூபா 500 ஆகிய இனங்களிற் கிடைக்கும். தேவையான இடத்தும், விசேடமான சந்தர்ப்பங்களிலும் கேள்வி முறைக்கு அப்பாலாகச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் வர்த்தக வங்கிகள் அநுமதிக்கப்பட்டுள்ளன. விருப்பம் தெரிவிக்கப்படுமிடத்து, சான்றிதழ்களை உப பிரிவுகளாகப் பிரித்து வழங்குவதற்கும் வர்த்தக வங்கிகள் அநுமதிக்கப்பட்டுள்ளன.

3. சான்றிதழ் பெறுவதற்குத் தகுதியுடைய அந்நிய செலாவணி வருமானங்கள்

(அ) பொருட்களின் ஏற்றுமதியால் கிடைத்த வருவாய்கள் (க.ஏ.பெ. பெறுமானம்); ஆனல் தேயிலை, இரப்பர், தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், கொப்பரா, தேங்காய் ஆகிய ஏற்றுமதிகள் தவிர்ந்து.

(ஆ) முதலீட்டு வருமானம், பராமரிப்பு அனுப்பு தொகைகள், குடிஅகல்வோர் மாற்றங்கள், விட்டுச் சென்றவை, அன்பளிப்புகள், மரபுரிமைகள், காசாக உள்ள நன்கொடைகள், உள்ளே வந்த மூலதன மாற்றங்கள், பயிற்ருெழிற் சேவையுழைப்பு வருமானங்கள், கழிவுகள், முகவர் சேவைச் செலவுகள் ஆகியனவற்றிலிருந்து நேரத்துக்கு நேரம் அறிவித்தல் கொடுக்கப்படவிருக்கும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றினுற் கிடைக்கும் அந்நிய செலாவணி வருவாய்கள்; உட்பாய்வான பணவனுப்பலின் முழுப் பெறுமதிக்கும்,

(இ) சுற்றுலாப் பயணத்தாரிடமிருந்தும், வெளியூரிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் இலங்கை வாசிகளிடமிருந்தும் (துணையான சான்றிதழ்களின்றி அந்நிய செலாவணி வழங்கப்பட்ட இலங்கை வாசிகள் தவிர்ந்து) கிடைக்கும் அந்நிய செலாவணி வருவாய்கள்; கையளிக்கப்பட்ட அந்நிய செலாவணியின் முழுப் பெறுமதிக்கும். ஆயினும் இவர்கள் விரும்புவார்களேயானல், வர்த்தக வங்கிகளோ அந்நிய செலாவணிக் கொள்வனவு செய்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் அநுமதிக்கப் பட்ட ஏனையோரோ, கையளிக்கப்பட்ட அந்நிய செலாவணிக்கு வழக்கமான வீதத்தில் பணம் கொடுப்பதோடு கூட, அவர்கள் உரிமை பெறத்தக்க, சான்றிதழ்களின் பணப் பெறுமானத்தையும் அவர்களுக்குக் கொடுப்பார்கள்.

4. சான்றிதழ்கள் கையளிக்கப்பட வேண்டிய நியதியுடைய அந்நிய செலாவணிக் கொடுப்பனவுகள்

i. இறக்குமதிகள்

(அ) 1968 மே 5இல் வெளிவந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68இன் நியதியின்படி இறக்குமதிகள் இரண்டு பகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது (அ), (ஆ) பகுப்புகளாகும். பகுப்பு ''ஆ'' வைச் சேர்ந்த இறக்குமதிக்கான சகல கொடுப்பனவுகளுக்கும் சமமான பெறுமானமுடைய சான்றிதழ்கள் எந்த வர்த்தக வங்கியினூடாகக் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ, அந்த வங்கிக்கு கையளிக்கப்பட வேண்டும். விசேட உத்தரவுச் சீட்டுகளின்கீழ் வரையறுப் பொது உத்தரவுச் சீட்டு மூலமாகப் பெறப்படும் இறக்குமதிகள் இந்நியதிக்கு விதிவிலக்காகும்.

(ஆ) வரையறுப் பொது உத்தரவுச் சீட்டின்கீழான இறக்குமதிகள் நாணயக் கொடுகடன் கடிதங்களுக்கு எதிராக மட்டும் அநுமதிக்கப்படும். நாணயக் கொடுகடன் கடிதம் திறக்கப்படும் வேளையில் அதன் முழுப் பெறுமானத்திற்குச் சமமான சான்றிதழ்கள் வர்த்தக வங்கிகளுக்குக் கையளிக்கப்பட வேண்டியதாகும்.

ii. இறக்குமதிக்கல்லாத கொடுப்பனவுகள்

அரசகருமச் செலவுகள், அநுமதிக்கப்பட்ட கல்விச் செலவுகள், பராமரிப்பு அனுப்பு தொகைகள், சுற்றுலாப் பயணத்தார்மேலான சில செலவுகள், ஏற்றுமதி ஊக்குவித்தற் சேவை, செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் குறித்து விதிவிலக்களிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் ஆகியவை தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளிற்காக அவற்றிற்குச் சமமான பெறுமானமுடைய சான்றிதழ்கள் கையளிக்கப்படல் வேண்டும். இக் கொடுப்பனவுகள், தற்போதுள்ளனபோல், செலாவணிக் கட்டுப்பாட்டு அநுமதிக்குட்பட்டனவாயிருக்கும். ஆயினும் அத்தகைய செலாவணி அனுமதிச் சீட்டுகள், அந்நிய செலாவணி கொள்வனவு செய்யப்படுவதற்குமுன் சான்றிதழ்கள் கையளிக்கப்படல் வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டனவாயிருக்கும்.

5. கேள்வி மூலம் சான்றிதழ்களின் விற்பனவு.—மத்திய வங்கி, சான்றிதழ்களின் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரங்களைப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கோரும். கேள்விகளுக்கான நியதிகளும், நிபந்தனைகளும், கேள்விக்கான அறிவித்தலிற் குறிக்கப்படும்.

6. பொது மக்களின் தகவலுக்காக, இந்த அறிவித்தல், இத்திட்டத்தின் வெளியுருவத்தைத் தருகின்றது. விரிவான இயக்க விதிகள், மத்திய வங்கியினல் வர்த்தக வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், எவ்விடயம் சம்பந்தமாகவோ ஐயப்பாடுகள் எதுவும் இருப்பின், பொது மக்கள் இவ்வங்கிகளின் உதவியை நாட வேண்டும்.

**ஜே. ஜீ. பி. ஜயசுந்தர,**
பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

**க. குணரத்தினம்,**
பதில் முதன்மைக கணக்காளர்,